பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 07 வியாழக்கிழமை 20.01.2022 கதிர் 76

### இனி இது ரகசியம் அல்ல!


தமிழ் மக்களின் அரசியலில் உணர்வுபூர்வமான விடயங்களில் ஒன்று மீனவர் பிரச்சினை.

வடக்கு, கிழக்கு தமிழ் மீனவர்கள் – தமிழக மீனவர்கள் சர்ச்சை என்பது தொப்புள் கொடி உறவுகளின் இழுபறி போன்றது. அண்ணன் – தம்பி பக்கம்02

## வடக்கு அமைச்சுக்களின் செயலாளர்கள் அதிரடி இடமாற்றம்







(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்களின் செயலாளர்கள் இன்று முதல் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவால் வழங்கப்படவுள்ள இந்த இடமாற்ற உத்தரவுக்கமைய தற்போதைய கல்வி, சுகாதாரம், பேரவை, உள்ளூராட்சி மற்றும் ஆளுநர் செயலக செயலாளர்களே இடமாற்றப்படுகின்றனர்.

அதன்படி சுகாதார அமைச்சின் செயலாளர் செந்தில்நந்தனன் மாகாண சபை பேரவை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ☞2

# கொள்கை விளக்க உரையில் தமிழரை அவமதித்த கோட்டா

## சபையில் சுமந்திரன் குற்றச்சாட்டு



வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் சுய நிர்ணயம், சுயாட்சி, அதிகாரப் பகிர்வு வேண்டும் என வலியுறுத்தி வரும் நிலையில், சில வசதிகளை மட்டுமே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதனைச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுப்போம், நல்லிணக்கத்தை உருவாக்க இதுவே தீர்வு என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது கொள்கை விளக்க உரையில் கூறி தமிழ் மக்களை அவமதித்துள்ளார்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன் குற்றஞ்சாட்டினார். ☞2

## வன்முறையில் ஈடுபட்ட மாணவர்களுக்கு கடும் எச்சரிக்கையுடன் கிடைத்தது பிணை

(எஸ்.நிதர்ஷன்)

வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட பாடசாலை மாணவர்களுக்குச் சாவகச்சேரி நீதிவான் கடும் எச்சரிக்கையுடன் பிணை வழங்கியுள்ளார்.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற எல்லைக்குள் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் மாணவர்கள் சிலர் குழுக்களாக இணைந்து அடாவடிகள் மற்றும் வன்முறைச் சம்பவங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வந்துள்ளனர். இது தொடர்பில் ☞2

## தேசிய வளங்களை விற்காதே; ஒப்பந்தத்தை இரத்துச் செய்!

### கொழும்பில் ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்



திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்கும் வகையில் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையை இரத்துச் செய்யுமாறு வலியுறுத்தி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'தேசிய வளங்களை ☞2

## மஹிந்தானந்தவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை



விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்ந்து வருகின்றது என அறியமுடிகின்றது.

இது தொடர்பான ஆரம்பகட்டப் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன எனவும், ☞10

## மாணவிகளின் தலைமுடியை வெட்டிவந்த மர்ம நபர் கைது

பதுளை மாவட்டத்துக்குட்பட்ட பண்டாரவளை நகரம் மற்றும் அதனை அண்மித்த ☞2

## வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்த பிரிட்டன் அமைச்சர்



(இ.கலையமுதன்)

தெற்காசியா மற்றும் கொமன்வெல்த்துக்குப் பொறுப்பான பிரிட்டன் அமைச்சர் அகமட் விம்பில்டன் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவைச் சந்தித்தார். ☞2

## யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நாளை ஆரம்பம்

(இ.கலையமுதன்)

யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 12 ஆவது தடவையாக நாளை வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை முற்றவெளியில் நடைபெறவுள்ளது.

கண்காட்சி தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட ஊடக சந்திப்பு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நேற்று மதியம் 3 மணியளவில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ். வர்த்தகத் தொழில்துறை மன்றத்தின் தலைவர் நந்தரூபன் –

யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சியானது சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை வடக்கில் உள்ள மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கின்ற ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சச்சரவு மாதிரியானது. அதைக் கையாள்வதில் கவனமும், சிரத்தையும், நுட்பமும் அவசியம்.

பல நாள்களில் – பல சமயங்களில் –இலங்கைக் கரை கண்ணுக்குத் தெரியும் தூரம் வரை தமிழக மீனவர்கள் கூட்டமாக முன்னேறி வருவது உண்டு. அப்போதெல்லாம், ஒவ்வொரு முறையும், அவர்களை விரட்டிச் சென்று கலைத்து அனுப்பும் வேலையை இலங்கைக் கடற்படை செய்வது கிடையாது. சில சமயம் நடக்கும். சில சமயம் உதாசீனமாகச் செயற்படுவர்.

ஆனால், அப்படி அத்துமீறுவோரை இன்று பிடித்து வாருங்கள் என்று மேலிடத்து உத்தரவு வரும் போல. அன்றைய தினம், 'டபிள் இன்ஜின்' பூட்டி வேலை செய்வர் கடற்படையினர் என்று நினைக்கிறேன்.

ஆனால் அதற்காக, எல்லை மீறாத தமிழக மீனவர்களையும் அள்ளி வருவதா?

கடந்த டிசெம்பர் 19ஆம் திகதி திடீரென இப்படி மீனவர் சுற்றி வளைப்பு ஒரே தினத்தில் நடந்தது.

மன்னாரில் 2 படகுகளில் வந்த பன்னிரு மீனவர்கள் சிக்கினர்.

ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு உட்பட்ட கடல் பிரதேசத்தில் 6 படகுகளில் வந்த 43 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சிக்கிய மீனவர்கள் எல்லோரும் தாங்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறவேயில்லை என்று ஒரேயடியாகச் சாதித்தனர்.

எனினும், அப்படி வாதிட்டு, சட்ட வியாக்கியானம் பண்ணி, பிரயோசனமில்லை, குற்றத்தை ஒப்புக் கொண்டு, ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையை ஏற்றுக் கொண்டால், விரைந்து வீடு திரும்பலாம் என்ற கருத்தில் – வேறு வழியின்றி – அவர்களும் வழமை போல குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

மன்னார் நீதிமன்றம் பன்னிரு மீனவர்களுக்கும் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருடச் சிறைத் தண்டனையுடன் விடுதலைத் தீர்ப்பு வழங்கியது. அவர்களில் மூன்று பேருக்குக் கொரோனாத் தொற்று இருப்பதால் அவர்கள் மூவரும் இங்கு சிறையில் இருக்க, எஞ்சியோர் நாடு திரும்பினர்.

இதேவேளை, ஊர்காவற்றுறை நீதிமன்ற நியாயாதிக்கத்துக்குள் வந்த 43 தமிழக மீனவர் விடயத்தில், அவர்கள் கைது செய்யப்பட்ட கடல் பிரதேசத்தை சட்ட ரீதியாக ஆவணமாகக் குறித்து, வரைபட விவரமாகத் தரும்படி நீதிமன்றம் பணித்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில், மன்னார் நீதிமன்றுக்கு உட்பட்ட வழக்கில், பன்னிரு தமிழக, மீனவர்களும் கைது செய்யப்பட்ட சமயம், பிடிக்கப்பட்ட இரண்டு படகுகள் தொடர்பான வழக்கு இரண்டொரு தினங்களில் நீதிமன்றுக்கு வர விருக்கின்றது.

மீனவர்கள் கைது செய்யப்பட்ட இடம், அவர்களின் படகுகள் வழி மறிக்கப்பட்ட இடங்கள் பற்றிய வரைபட விவரத்தை மன்னார் நீதிமன்றமும் கேட்கலாம் என்ற எண்ணத்தில் அதற்கு ஆயத்தமானார்கள் கடற்றொழில் அமைச்சு அதிகாரிகள்.

மேற்படி இரு படகுகளின் ஜீ.பி.எஸ். கருவிகளை கடற்படையிடம் பெற்று, அவற்றில் ஒன்றை ஆராய முற்பட்டார்கள் அதிகாரிகள். அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்ததாக நம்பகரமாகத் தெரியவந்தது.

அந்த மீனவர்கள் கைது செய்யப்பட்ட சமயம் அவர்களின் படகுகள் மன்னார் பேசாலைக் கரையிலிருந்து சுமார் 25 கடல் மைல் தூரத்தில் இருந்ததாம். இருபது கடல் மைல் தூரம் வரைதான் இலங்கைக் கடல் எல்லை. ஆக, நான்கு, ஐந்து கிலோ மீற்றர் தூரம் மேலதிகமாகப் பயணித்துச் சென்று இந்தப் படகுகளில் ஒன்றை அள்ளி வந்திருக்கின்றனர் என்ற சந்தேகம் அமைச்சு அதிகாரிகளுக்கு வந்ததால் மேற்படி ஜி.பி.எஸ். கருவிகளைப் பரிசீலிக்கும் நடவடிக்கையை கைவிட்டு அவர்கள் அந்த முயற்சியிலிருந்து ஜாகா வாங்கினர் எனவும் அறிய வந்தது.

'நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமல்ல, நிலை நாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்.' – இது நீதித்துறை முது மொழி. தமிழக மீனவர்கள் விடயத்தில் வடக்கு நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கு இது சமர்ப்பணம்.

– மின்னல் –

## வடக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை 10.30 மணியளவில் வடக்குமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், வடக்கு மாகாணத்துக்கான திட்டங்கள் மற்றும் நீதி மற்றும் பொறுப்புக்கூறலின் அவசியம் குறித்து கலந்துரையாடப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவரது விஜயத்தின்போது இலங்கைக்கான பிரிட்டன் உயர்ஸ்தானிகர் ஷாரா ஹில்டன் இணைந்திருந்தார்.

## கொள்கை விளக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றஞ்சாட்டிய சுமந்திரன் எம்.பி. மேலும் பேசுகையில் –

இறுதியாகக் கூடிய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதம் நடத்த அதிக நேரம் வேண்டும் என நாம் வாதிட்டோம். ஆனால், ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையைக் கேட்ட பின்னர், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நாம் அதிக நேரம் கேட்டு வாக்குவாதப்பட்டது வீணானது என்றே கருதுகின்றேன். கொள்கை என எதுவுமே இல்லாத உரை என்றே ஜனாதிபதியின் உரையைக் கூற வேண்டும். ஜனாதிபதியின் உரையில் நாட்டிலுள்ள மற்றும் மக்களின் பிரச்சினைகள் பற்றி கூறிய போதிலும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் என எதனையும் அவர் கூறவில்லை.

ஜனாதிபதி தனது உரையில் ஒரு சில விடயங்களைக் கூறியுள்ளார். குறிப்பாக மிக மோசமான நாணய நெருக்கடியொன்றை எதிர்கொண்டுள்ளோம், பொருளாதார நெருக்கடியின் உச்சத்தில் நாம் உள்ளோம், இதற்கான தீர்வுகளைக் காண கடந்தகால அரசுகள் தோல்வி கண்டுள்ளன எனக் கூறினார். இறுதியாக இருந்த அரசை மட்டுமல்ல அதற்கு முன்னர் இருந்த அரசுகளையும் ஜனாதிபதி குறை கூறியுள்ளார். இதற்கு முன்னர் இருந்த அரசுகளில் இரண்டு அரசுகளுக்கு மஹிந்த ராஜபக்ஷவே ஜனாதிபதியாகத் தலைமை தாங்கினார். ஆகவே, இந்த நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மஹிந்த ராஜபக்ஷவின் அரசும் காரணம் என்பதையும், மஹிந்த ராஜபக்ஷ அரசும் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதில் தோல்வி கண்டுள்ளது என்பதையுமே ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஜனாதிபதி பிரச்சினையை இனங்கண்டு அதனை மஹிந்த ராஜபக்ஷவின் தோளில் சுமத்தியுள்ளாரே தவிர இந்த நெருக்கடிக்குத் தீர்வு என்ன, எந்தப் பாதையில் பயணித்து இந்த நெருக்கடிகளில் இருந்து மீளப்போகின்றோம் என்ற தீர்வுகளை முன்வைக்கத் தவறியுள்ளார்.

அவரது உரையை நான் கேட்டுக் கொண்டிருந்த நேரத்தில் சில குறுஞ்செய்திகள் வெளிவந்தன. அதனைப் பார்க்கும் போது மேலும் 500 மில்லியன் டொலர்கள் எமது பிச்சைப் பாத்திரத்தில் போடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. இதுவொரு நாளாந்தச் செயற்பாடாக மாறிவிட்டது. கையில் பிச்சைப் பாத்திரத்தை ஏந்திக்கொண்டு யாரும் பிச்சையிடுவார்களா எனக் காத்துக்கொண்டிருக்க வேண்டியுள்ளது. இதுதான் இன்று எமது நிலையாக மாறியுள்ளது. அடுத்த கட்டத்தில் என்ன செய்யப்போகின்றோம் என்பது தெரியாத நிலைமை உருவாகியுள்ளது.

அதேபோல் இந்த நாடாளுமன்றத்தில் வெவ்வேறு மக்களின் பிரதிநிதிகள் வெவ்வேறு ஆணையுடன் உள்ளனர் என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ள போதிலும் வடக்கு, கிழக்கு மக்களின் விடயத்தில் முற்றிலும் வேறுபட்ட கருத்துக்களை முன்வைத்துள்ளார். நல்லிணக்கம் தொடர்பில் அரசு கவனம் செலுத்துவதாகவும், வடக்கு, கிழக்கு மக்களுக்குச் சில வசதிகளைச் செய்து கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம் என ஜனாதிபதி கூறி எமது மக்களை அவமதித்துள்ளார். எமது மக்கள் சுயநிர்ணயம், சுயாட்சி, அதிகாரப் பகிர்வு, ஆட்சி என்பவற்றைக் கேட்டு நிற்கின்றனர். ஆனால், வெறுமனே வசதிகளை மட்டும் எமது மக்கள் எதிர்பார்ப்பதாகவும், அதனைச் செய்துகொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி கூறுவதையும், நல்லிணக்கத்தை உருவாக்க இதுவே தீர்வு எனவும், தேசிய பிரச்சினைக்குத் தீர்வு இது எனவும் கூறுவதையும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைமைகள் தமது அரசியல் சித்தாந்தத்தைத் தற்காலிகமாக ஒதுக்கி வைத்துவிட்டு மக்களின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார். அரசியல் சித்தாந்தம் என்பது எமது கொள்கை. அது எமது மக்கள் எமக்குக் கொடுத்த ஆணை. அதனை ஓரமாக வைத்துவிட்டு உங்களின் கருத்துக்கு செவிமடுக்க நாம் தயாரில்லை – என்றார்.

## யாழ்.சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளமாகும் – என்றார்.

இந்தக் கண்காட்சிக்கு யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து எல்.ஈ.சி.எஸ். நிகழ்வை ஏற்பாடு செய்துள்ள நிலையில் சர்வதேச வர்த்தக மன்றம், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகம் ஆகியன அனுசரணை வழங்கியுள்ளன.

அனைத்துப் பொதுமக்களையும் கண்காட்சியில் இணைந்துக்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளதுடன் மேலும் தகவல் விவரங்களுக்கு www.jitf.lk ஐப் பார்வையிடவும் அல்லது 0771093792 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும் என்றனர்.

நேற்றைய ஊடக சந்திப்பின்போது வர்த்தகத் தொழில்துறை மன்றத்தின் பிரதிநிதிகள் மற்றும் கண்காட்சிக்கான அனுசரணையாளர்களும் இணைந்திருந்தனர்.

## மாணவிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் பாடசாலை மாணவிகளின் தலைமுடியை (கொண்டை) வெட்டும் மர்ம நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊவா – பரணகம பகுதியைச் சேர்ந்த 33 வயதான சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பண்டாரவளை பகுதியில் கடந்த சில நாட்களாக மாணவிகளின் தலைமுடி வெட்டப்பட்டுள்ளது. சனக் கூட்டம் அதிகமாகக் காணப்படும் பஸ்களுக்குள் ஏறும் குறித்த நபர், மிகவும் சூட்சுமமான முறையில் தலைமுடியை (கொண்டையை) வெட்டி வந்துள்ளார்.

இதனால் மாணவிகள் மத்தியில் பெரும் அச்சம் நிலவியது. இது தொடர்பில் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பண்டாரவளையிலிருந்து ஹீல்ஓய வரை பயணித்த பஸ் ஒன்றில் இருந்த மாணவி ஒருவரின் தலைமுடியை வெட்ட குறித்த சந்தேகநபர் முயற்சித்துள்ளார்.

இதையடுத்து, பஸ்ஸில் பயணித்தவர்கள், குறித்த சந்தேகநபரைப் பிடித்து, பண்டாரவளைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபர் வசமிருந்த பயணப் பையிலிருந்து, பாடசாலை மாணவிகளுடையது எனச் சந்தேகிக்கப்படும் கொண்டைகள், கத்தரிக்கோல் உள்ளிட்ட சில பொருள்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## வன்முறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல தரப்பினரும் கவனம் எடுத்த நிலையிலும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து வந்த நிலையில் கடந்த வாரமும் மாணவர்கள் அடிதடி போன்ற வன்முறையில் ஈடுபட்டதால் குறித்த சம்பவத்தில் ஈடுபட்ட மூன்று மாணவர்கள் மீது பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

குறித்த வழக்கு விசாரணைகள் சாவகச்சேரி நீதிவான் யூட்சன் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போது சந்தேகநபர்களான மூன்று மாணவர்களும் நீதிவானால் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர்.

பாடசாலை நாள்களில் கல்வியில் கவனம் செலுத்தும்படியும், குற்றச்செயல்களில் ஈடுபடுவதை உடனடியாக நிறுத்தும்படியும், மேலும் குற்றச்செயலில் ஈடுபட்டால் நீதிமன்றத்தின் தண்டனைகளைப் பெற வேண்டிவரும் எனவும் நீதிவான் எச்சரித்தார். அத்துடன் பெற்றோர் முன்னிலையில் மாணவர்களுக்கு அறிவுரைகளையும் நீதிவான் கூறினார்.

குறித்த மூன்று மாணவர்களையும் தலா 75 ஆயிரம் பெறுமதியான ஆள்பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்ததுடன் வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 30ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## தேசிய வளங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விற்காதே; ஒப்பந்தத்தை உடன் இரத்துச் செய்!' எனும் தொனியில் ஜே.வி.பியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் தொழிற்சங்கப் பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர்.

## வடக்கு அமைச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுநரின் செயலாளர் சரஸ்வதி மோகநாதன் சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோ உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராகவுள்ள வரதீஸ்வரன் கல்வி அமைச்சின் செயலாளராக மாற்றப்பட்டுள்ளார்.

பேரவை செயலாளர் குகநாதன் பிரதி பிரதம செயலாளராக (நிர்வாகம்) நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை, பதில் பிரதி பிரதம செயலாளராகவும் பணியாற்றி வந்த, பற்றிக் டிரஞ்சன் உள்ளூராட்சி திணைக்களத்தின் ஆணையாளராகச் செயற்படுவார்.

ஆளுநரின் செயலாளராகத் தற்போது பிரதேச செயலாளராக கடமையாற்றும் ஒருவர் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான அறிவித்தல் நேற்று மாலையே தொலை நகல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அனைத்து மக்களுக்குமான மனித உரிமைகளை இலங்கை உறுதிசெய்தால் ஆதரவளிக்கத் தயார்!

## பிரித்தானியா அதிரடி அறிவிப்பு

இலங்கையில் அனைத்துப் பிரஜைகளுக்குமான மனித உரிமைகளை உறுதி செய்வதை முன்னிறுத்தி செயற்பட்டால் தாம் ஆதரவை வழங்கத் தயார் என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான தனது விஜயம் குறித்து வெளியிட்டுள்ள அறிவிப்பிலேயே பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் தாரிக் அஹமட் இதனைக் கூறியுள்ளார்.

வர்த்தகம், முதலீடு மற்றும் பரஸ்பர பாதுகாப்பு ஆகியவற்றில் இந்திய - பசுபிக் பிராந்தியத்தின் முக்கியத்துவம் குறித்து பிரித்தானியா விசேட கவனம் செலுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக பிரித்தானியா, பொருளாதார ரீதியான தொடர்புகளை அடிப்படையாகக் கொண்ட வலையமைப்பைக் கட்டியெழுப்பி வருவதாகவும் இந்த விடயத்தில் இலங்கையுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறினார்.

காலநிலைமாற்ற சவால்களைக் குறைப்பதற்கும் சூழலைப் பாதுகாப்பதற்கும் இலங்கையால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கும் தாம் தயார் என்றும் பிரித்தானியா அறிவித்துள்ளது.

புதியதொரு பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்கவும் நிதிச்சேவை வழங்கல் துறையை அபிவிருத்தி செய்யவும் வர்த்தக மற்றும் முதலீட்டுத் தொடர்புகளை விரிவுபடுத்தவும் இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் போர் முடிவிற்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் சமாதானத்தையும் பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் சமூகங்களுக்கு இடையிலான ஒற்றுமையையும் உறுதிப்படுத்துவதற்கான ஜெனீவாவின் நடவடிக்கையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# எரிவாயு தட்டுப்பாட்டை நீக்கும் நோக்கில் தரம் குறைந்த காஸ் சந்தையில் விற்பனை!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

எரிவாயு தட்டுப்பாட்டை நீக்கும் நோக்கில் தரம் குறைந்த எரிவாயு சிலிண்டர்கள் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

எரிவாயு வெடிப்புச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை, எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் சந்தித்த போது அவர் இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார்.

எரிவாயு வெடிப்புச் சம்வங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிர்க்கட்சி தலைவர் நிதி உதவிகளையும் வழங்கியுள்ளார்.

இதன் போது உரையாற்றிய சஜித் பிரேமதாஸ -

எரிவாயு பிரச்சினையை அரசாங்கம் கேலியாக எடுத்துக் கொண்டுள்ளது. எந்தவிதமான கரிசனையும் கிடையாது. சந்தையில் எரிவாயு தட்டுப்பாட்டை நீக்கிக் கொள்ளும் நோக்கில், தரம் குறைந்த எரிவாயு சிலிண்டர்களை சந்தையில் விற்பனை செய்யுமாறு சிலர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இது தொடர்பிலான தகவல்கள் அரசாங்னத்துக்கு உள்ளிருந்து எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. வேண்டுமென்றே தரம் குறைந்த எரிவாயு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

யார் இதற்குப் பொறுப்புச் சொல்வது? இவ்வாறான ஒரு பாதிப்பு இடம் பெறும் போது , பாதிக்கப்பட்டவர்களுக்கு குறைந்தபட்ச மனிதாபிமான நட்டஈடு வழங்கப்பட வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இந்த அரசாங்கம் இதுவரையில் ஒரு சதமேனும் நட்டஈடு வழங்கவில்லை.

மனிதாபிமானமற்ற அரசாங்கமொன்றே இன்று நாட்டில் ஆட்சி



செய்கின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிறுதொகை நட்டஈட்டை நாம் வழங்குகின்றோம், மேலும் அவர்களின் சார்பில் நீதிமன்றம் சென்று அவர்களுக்கு நட்டஈடு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான இலவச சட்ட ஆலோசனைகளும் வழங்கப்படும் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.



# தொடர்ந்தும் எகிறுகிறது நாட்டில் அரிசியின் விலை

இலங்கையில் பல்வேறு வர்த்தக நிலையங்களில் அரிசியின் விலை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது.

வர்த்தகர்கள் அரிசி விலையை தன்னிச்சையான அதிகரித்து விற்று மக்களை சுரண்டுகின்றனர் எனவும், இதனால் தாங்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர் எனவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

பெரும்பாலான கடைகளில் வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசி 160 முதல் 180 ரூபாவுக்கும், நாட்டு அரிசி 170 முதல் 190 ரூபாவுக்கும், சம்பா அரிசி 230 முதல் 260 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி பற்றாக்குறை காரணமாக அரிசியின் விலை கட்டுப்பாட்டை அரசாங்கம் தளர்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயின், கேரள கஞ்சாவுடன் முல்லைத்தீவில் மூவர் கைதாகினர்



*முல்லைத்தீவு, ஜன. 20*

முல்லைத்திவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திருமுறிகண்டி பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 300 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 9 கிராம் கேரள கஞ்சாவுடன் மூவர் மாங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாங்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில் குறித்த நபர்கள் மூவரும் ஹெரோயின் மற்றும் கேரள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற மாங்குளம் பொலிஸார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறைச்சாலை அதிகாரிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டமைக்கு சர்வதேச ரீதியில் எதிர்ப்பு

சிறைச்சாலை அதிகாரிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டமைக்கு சர்வதேச ரீதியான மனித உரிமை அமைப்புக்களும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

கடந்த 2012 ஆம் ஆண்டில் வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தில் 27 பேர் கொல்லப்பட்டமையுடன், 50 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளின் இறுதியில் அப்போதைய சிறைச்சாலை அதிகாரி எமில் ரஞ்சன் லமாஹேவாவிற்கு கடந்த 12 ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டமைக்கு மனித உரிமை கண்காணிப்பகம் உள்ளிட்ட பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இந்த தண்டனை சிறைச்சாலையின் மிக மோசமான நிலைமையை மூடி மறைப்பதற்கான முயற்சியாகவே நோக்கப்பட வேண்டுமென மனித உரிமை அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையில் 1976 ஆம் ஆண்டின் பின்னர் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை என்ற போதிலும் கடந்த 2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையில் 1,284 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனையை ரத்து செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மரண தண்டனையை எதிர்க்கும் பல்வேறு அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

# தமிழர்களின் அரசியல் பேச்சுக்கான கதவுகளைப் பூட்டினார் ஜனாதிபதி!

## முன்னாள் மாகாணசபை உறுப்பினர் வேதனை



தமிழர் தரப்புடன் அரசியல் பிரச்சினை தொடர்பாகப் பேசுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என எதிர்வு கூறப்பட்டது. ஆனால், ஜனாதிபதியின் உரை எதிர்பார்ப்புக்கு எதிராகவே அமைந்துள்ளது என வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரின் தொடக்கத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உரை இடம்பெற்றது. இந்த உரை நிகழ்த்தப்படுவதற்கு முன்பாக ஊடகங்களில் பல ஊகங்களில் வெளிவந்தன.

அவற்றில் தமிழர் தரப்புடன் அரசியல் பிரச்சினை தொடர்பாகப் பேசுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என எதிர்வு கூறப்பட்டது. ஆனால், ஜனாதிபதியின் உரை எதிர்பார்ப்புக்கு எதிராகவே அமைந்துள்ளது.

வடக்கு கிழக்குத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி கூறியமை உங்கள் அரசியல் நிலைப்பாட்டைக் கைவிட்டு வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கையை முன்னேற்றும் அரசாங்கத்தின் செயற்பாட்டிற்கு ஒத்துழையுங்கள் என அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை ஏற்றுக்கொள்ளாது மறைத்து தமிழ் மக்களுக்கு வாழ்வாதாரப் பிரச்சினைதான் முதன்மையானது என்ற தோற்றப்பாட்டை ஜனாதிபதி காட்ட முனைகிறார்.

இதனையே இந்தியப் பயணத்தின் போதும் ஜனாதிபதி கூறினார். ஆகவே, கோட்டாபய அரசாங்கம் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளத் தயார் இல்லை என்பதை மீண்டும் உறுதி செய்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீளவே முடியாத இக்கட்டு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி முறைமை – போக்கு – பல தரப்புகளினாலும் மிக மோசமாக விமர்சிக்கப்பட்டு வருகின்றது. நாட்டின் நிலைமையை மிக மோசமாக்கி, எல்லாவற்றையும் அவரின் நிர்வாகம் குட்டிச் சுவராக்கி விட்டது என்று பல மட்டங்களிலும் கண்டனம் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்தி, நாட்டைக் கட்டியெழுப்புவதை விடுத்து, உடனடி நிதி நெருக்கடிப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக பண நோட்டுக்களை அச்சடித்துத் தள்ளி, புழக்கத்துக்கு விட்டு, அதன் மூலம் அவ்வப்போதைய பிரச்சினைகளைத் தீர்க்கும் மூன்றாந்தர பொருளாதாரத் தந்திரோபாயமே பின்பற்றப்படுவதாக விசனத்துடன் சுட்டிக் காட்டப்படுகின்றது. கடந்த ஆண்டில் மட்டும் இப்படி சுமார் எழுபதாயிரம் கோடி ரூபா (340 கோடி அமெரிக்க டொலர் பெறுமதிக்கு) நோட்டுகளை அச்சிட்டு புழக்கத்துக்கு விட்டமை மூலம், உள்ளூர் கொடுப்பனவுக் கடப்பாடுகளைச் சமாளிக்க முற்பட்டிருக்கின்றது கோட்டா அரசு.

கடந்த நவம்பரில் 9.9 வீதமாக இருந்த பண வீக்கம், முடிந்த டிசெம்பர் மாதத்தில் 12.1 வீதமாக எகிறி விட்டது.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் உணவுப் பொருள்களின் விலை இரட்டிப்பாகி விட்டது.

ஆட்சி நிர்வாகத்தில் ஊழலும், குழப்பங்களும் தாராளமாக மலிந்து விட்டன.

மக்கள் பாவனைக்கு விநியோகிக்கப்படும் எரிவாயு சிலிண்டர்களின் உள்ளடக்கமான எரிவாயுக்களின் கலவை, கேட்டுக் கேள்வியின்றி மாற்றப்பட்டமையால், பல நூறு வீடுகளில் எரிவாயு அடுப்புகள் பற்றி எரிந்து வெடித்துள்ளன. உயிரிழப்புகள், படுகாயங்கள், சொத்திழப்புகள், பீதி, பயம் என்று நாட்டின் அனைத்து இல்லங்களையும் பெரும் நெருக்கடிக்குள் ஆழ்த்தி விட்டது எரிவாயு சிலிண்டர் ஊழல். ஆனால் இந்த மோசமான தவறுக்கு யாரும் பொறுப்புக் கூறவில்லை. தவறிழைத்தவர்கள் அடையாளம் காணப்படவுமில்லை. தண்டிக்கப்படவுமில்லை.

உரங்களுக்கான அரச மானியம் வருடாந்தம் ஆக 40 கோடி டொலர்தான். அதனைப் பெற்றுக் கொடுக்க வக்கற்ற – வகையற்ற – கோட்டா அரசு, பசுமைப் புரட்சிக்காக அந்த உரங்களின் இறக்குமதிக்குத் தடை என அறிவித்து, முழு நாட்டையுமே பெரும் பொருளாதாரச் சிக்கல், அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு, பசி, பட்டினி, பஞ்சம் என்ற மீளவே முடியாத நெருக்கடிக்குள் மூழ்கடித்து விட்டது.

அந்த நெருக்கடியைச் சமாளிக்க என்ற பெயரில் சீனாவில் இருந்து சேதன உரங்கள் இறக்குமதி என்று ஆரம்பித்து, அதிலும் ஊழல், மோசடி, குளறுபடி. அந்த உரத்தை சுவீகரிக்கும் நடவடிக்கையில் முறையான ஒழுங்கு விதிகள் கடைப்பிடிக்கப்படாமையால், அந்த உரத்தையும் முழுமையாக இழந்து, 67 லட்சம் அமெரிக்க டொலர்களையும் வீணே நாடு இழக்க வேண்டியதாயிற்று. இப்படி 150 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை மண்ணானமைக்காக யாரும் பொறுப்புக் கூறவுமில்லை. தண்டிக்கப்படவுமில்லை.

ஒவ்வொரு துறையிலும் நாட்டின் நிலைமை மோசம். ஒழுங்கற்ற – ஒழுக்கக் கேடான – நிர்வாகம். குற்றம் இழைப்போர் தண்டிக்கப்படாமல் தப்பிப்போகும் தண்டனை விலக்களிப்பு முறைமை அரசின் அனைத்துத் துறைகளிலும் தன்பாட்டில் தொடர்கின்றது.

தன் கழுத்தை இறுக்கும் வெளிநாட்டுக் கடன்கள், கடப்பாடுகளுக்கு ஈடு கொடுக்க முடியாத இலங்கை விரைவில் கடனிறுக்க வகையற்ற நாடு என அறிவிக்கப்படும் நிலைமை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## 8 மாணவர்களுக்கும் 3 ஆசிரியர்களுக்கும் ஹற்றன் பாடசாலையில் கோவிட் தொற்று!

ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட கினிகத்தேனை பகுதியில் உள்ள ஒரு பாடசாலை ஒன்றில் 8 மாணவர்களுக்கும் 3 ஆசிரியர்களுக்கும் கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

இதன் காரணமாக தொற்றாளர்கள் கல்வி கற்ற 10 ஆம், 11 ஆம் வகுப்புகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தொற்றுக்குரிய மாணவர்கள் கல்வி கற்ற வகுப்புகளுக்கு கிருமி தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளன என பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். இன்று பாடசாலைக்கு 150 மாணவர்கள் வரை சமுகமளித்திருந்தனர் என அவர் கூறினார்.

இவர்களில் நோய் அறிகுறிகளுடன் அடையாளம் காணப்பட்ட மாணவர்கள் வீடுகளுக்கு திருப்பியனுப்பப்பட்டனர் என அவர் மேலும் கூறினார்.

அதேபோல் இன்று 63 ஆசிரியர்கள் பாடசாலைக்குச் சமுகமளித்திருந்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

தொற்றுக்குள்ளான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் நேரடித் தொடர்பைப் பேணியவர்கள் அனைவரும் சுயதனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனத் தெரி விக்கப்படுகின்றது.

தொற்றாளர்களுடன் நெருக்கமான தொடர்பில் இருந்த 500 மாணவர்கள் வரையில் வீடுகளில் இருக்க பணிக்கப்பட்டுள்ளனர் என அதிபர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் வழங்க 50 கோடி டொலர் கடனாக வழங்கி உதவியது இந்தியா

எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக இலங்கைக்கு 50 கோடி அமெரிக்க டொலர் கடனை இந்தியா வழங்கியுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கு எழுதிய கடிதத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அந்நிய செலாவணி நெருக்கடியைச் சரிசெய்ய நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தின் பிரகாரம் 50 கோடி டொலர் நிதியை இந்தியா அண்மையில் வழங்கியிருந்தது.

பொருளாதார வளர்ச்சி மற்றும் இருதரப்பு பொருளாதார வர்த்தக தொடர்புகளின் பாரிய பங்களிப்பாக இந்த சலுகைகள் வழங்கப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் இந்தியா தொடர்ந்தும் இலங்கைக்கு ஒத்துழைப்பை வழங்கும் என ஜெய்சங்கர் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிடமிருந்து 90 கோடி டொலர் பெறுமதியான நிதி உதவி இம்மாதம் இலங்கைக்கு கிடைக்கும் என கடந்தவாரம் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை மாணவருக்குப் பைசர் மட்டக்களப்பில் ஏற்றும் நடவடிக்கை!

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசியான பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையின் கீழ் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் உள்ள மாணவர்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டு 350 மாணவர்களுக்கு ஏற்றப்பட்டுள்ளன என மட்டக்களப்பு வெட்டுக்காடு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் த.மிதுனன் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கமைய நாடளாவிய ரீதியில் 12 தொடக்கம் 15 வயதுவரையிலான பாடசாலை மாணவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை கடந்த செவ்வாய் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் உள்ள மாணவர்களுக்குஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஏனைய பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு தொடர்ச்சியாக தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெறும் எனவும் மாணவர்கள் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் ஆர்வமாக ஈடுபட்டு வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

## கிளிநொச்சி பொது நூலகத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது!



கிளிநொச்சி பொது நூலகத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த செவ்வாய்கிழமை இடம்பெற்றது.

கரைச்சி பிரதேச சபையால் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள இந்த நூலகம் கிளிநொச்சி நகரின் ஏ9 வீதியில் அமையவுள்ளது.

நூலகத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் யாழ்.இந்திய துணை தூதுவர் ராமராஜேஸ், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

கிளிநொச்சி பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாட்டைத் தொடர்ந்து கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து அதிதிகள் விழா இடம்பெறும் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் இடம்பெற்றதை தொடர்ந்து அடிக்கல் நாட்டப்பட்டது.

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு இலவச சூரிய மின்கலம் வழங்கப்படும்

## மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே அதிரடி



குறைந்த வருமானம் பெறுவோருக்கு இலவச சூரியக் கலங்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். இதற்கமைய , 5 வாட்ஸ், 10 வாட்ஸ் மற்றும் 15 வாட்ஸ் மின் சாரம் உற்பத்தி செய்யக்கூடிய சூரியக்கலங்கள் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. மேலும், சுமார் 5 வாட்ஸ் சூரியக்கலங்களைப் பெறுபவர்களுக்கு 1500 ரூபா வழங்கப்படும். அவர்கள் 10 வருடங்களின் பின்னர் 10 ஆயிரம் ரூபா வைப் பெற்றுக் கொள்வார்கள் எனவும் தெரிவித்துள்ளார். குறித்த திட்டத்திற்கமைய, ஆரம்ப கட்டத்தில் 14 ஆயிரம் வீடுகளுக்கு சூரியக் கலங்கள் இலவசமாக வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சந்தேகத்துக்குரிய முறையில் கொழும்பில் தங்கியோர் ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை கைதுசெய்ய ஏற்பாடு!

கொழும்பு நகரில் சந்தேகத்திற்குரிய முறையில் தற்காலிகமாக தங்கியிருக்கும் 2 ஆயிரத்து 746 பேர் உள்ளனர் என விசேட சுற்றிவளைப்பு மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் அடையாளங்களை உறுதி செய்வதற்காக பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றனர் என மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரில் உள்ள வீடுகள், வணிக வளாகங்கள், நிறுவனங்கள், அரசு அல்லது தனியார் வளாகங்கள், கட்டுமானத் தளங்கள் போன்றவற்றில் வசிக்கும் தற்காலிக குடியி ருப்பாளர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்காக மேல் மாகாண சமூகப் பொலிஸ் பிரிவு ஜனவரி 14, 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் மூன்று நாள் நடவடிக்கையை ஆரம்பித்திருந்தது.

தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் கொழும்பில் குற்றச்செயல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பதற்கும் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அங்கு அடையாளத்தை உறுதி செய்ய முடியாத சந்தேகத்திற்குரிய 2 ஆயிரத்து 746 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். 600 இற்கும் மேற்பட்ட சமூக பொலிஸ் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின்போது, அப்பகுதியில் தற்காலிகமாக வசிப்பவர்கள் குறித்த சரியான தகவல்களை உள்ளீடு செய்து உரிய பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் அல்லது சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நடவடிக்கையின்போது, மேல் மாகாணத்துக்கு வெளியே கொழும்பில் தற்போது வசிக்கும் ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 126 தற்காலிக குடியிருப்பாளர்களின் தகவல்களை அதிகாரிகள் சேகரித்துள்ளனர் என சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தென்னகோன் தெரிவித்தார். அவர்களுக்குள் 1,852 ஆண்களும், 894 பெண்களும் சரியான தகவல்களை வழங்கத் தவறியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

# இரத்மலானையில் இருந்து சர்வதேச விமான சேவை!

இரத்மலானை விமான நிலையத்திலிருந்து எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் சர்வதேச விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி தென்னிந்தியா மற்றும் மாலத்தீவு போன்ற இடங்களுக்கு விமான சேவைகள் மேற்கொள்ளப்படும் என அவர் கூறினார்.

இரண்டு விமான நிறுவனங்கள் ஏற்கனவே பிராந்திய மற்றும் சர்வதேச விமான சேவைகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு மேலதிகமாக சில விமான நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.



# 4ஆவது எரிவாயு அடுப்பு கந்தளாயில் வெடிப்பு

திருகோணமலை – கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நான்காவது எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றுள்ளது. கந்தளாய், இரண்டாம் குலனி பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தில் எந்த விதமான உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லையெனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கந்தளாய் பிரதேசத்தில் ஏற்கனவே மூன்று இடங்களில் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. பிராந்திய சுகாதார பணிப்பாளராக சுகுணன்




மட்டக்களப்பு மாவட்ட பதில் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராக வைத்தியர் ஜி.சுகுணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி நியமனம் தொடர்பாக வைத்தியர் ஜி.சுகுணன் இவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தார் –

சுகாதார சேவைகள் பணிப்பாளரால் எனக்கு கடிதம் ஒன்றின் ஊடாக தேவை கருதி மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சேவை பதில் பணிப்பாளராகக் கடமையாற்றுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் என்னை கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பதவியில் இருந்து உடனடியாக இடமாற்றம் பெற்று கடமையை பொறுப்பேற்றுக்கொண்டேன்.

மேலும் எனது பதவிக் காலத்தில் கல்முனை பிராந்தியத்தில் ஊடகவியலாளர்களின் பங்களிப்பு உச்சக்கட்டத்தில் எனக்குக் கிடைக்கப்பெற்றது. இதனால் மக்கள் உடனடியான தகவல்களைப் பெறுவதற்கு பங்களிப்பு வழங்கிய ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன். எனக் குறிப்பிட்டுள்ளார்.

# அக்கரப்பத்தனையில் 3 கோவில்களில் திருடர்கள் அடுத்தடுத்துக் கைவரிசை!



நுவரெலியா – அக்கரப்பத்தனையில் ஒரே நாளில் அடுத்தடுத்து, மூன்று கோவில்களில் திருட்டு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளமை அப்பகுதி மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்கரப்பத்தனை சின்னதோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலிலுக்குள் புகுந்த திருடர்கள் சாமி கழுத்தில் இருந்த தங்க நகை மற்றும் உண்டியலை உடைத்து பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

இதற்கிடையே இதற்கு அடுத்துள்ள பச்சைபங்களா தோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின் பூட்டை உடைத்து, அங்கிருந்த உண்டியலை உடைத்து பணத்தை திருடி எடுத்துச் சென்றுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து உருலேக்கர் தோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் பூட்டை உடைத்து அங்கிருந்த உண்டியலை உடைத்து பணத்தை திருடிச் சென்றுள்ளனர்.

அக்கரப்பத்தனை நகரத்துக்குள் அடுத்தடுத்த தோட்டங்களில் ஒரே நாளில் மூன்று கோவில்களின் பூட்டை உடைத்து திருட்டு நடந்திருப்பது பொதுமக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கோவில் திருட்டுகள் தொடர்பில் ஆலய பரிபாலன சபையினர்கள் அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து அக்கரப்பத்தனை பொலிஸாரும், நுவரெலியா பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரும், கைரேகை பிரிவினரும் ஆலய கட்டடங்களுக்குச் சென்று சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அத்துடன், சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை எனவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# கொவிட் தடுப்பூசியின் 4 ஆவது டோஸ் தேவைப்பட்டால் வழங்க நாம் தயார்!

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொரோனா தடுப்பூசியின் 4 ஆவது டோஸையும் தேவை ஏற்பட்டால் வழங்க இலங்கை தயாராக உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒமிக்ரோன் பிறழ்வுடன் கொரோனா பரவல் முடிவுக்கு வரும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

எனவே, கொரோனா தடுப்பூசியின் 4 ஆவது டோஸை வழங்க அரசாங்கம் மேலதிக தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் 4 ஆவது டோஸ் தேவைப்படும் போதும் தேவையான தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கான அமைப்பு உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 257

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

### 659.இன்ஸ்பெக்டர் பஸ்தியாம் பிள்ளை அணியினர் கொல்லப் பட்டமை பற்றிய தகவல்களை தெரியப்படுத்தியது கணேஸ் வாத்தியா?

மடுப் பண்ணையை அணுகும்போது பஸ்தியாம்பிள்ளை, தமது வண்டிச் சாரதி சிறிவர்தனவையும் கணேஸ் வாத்தியையும் பண்ணையின் பாதை முகப்பிலேயே வண்டியில் விட்டு விட்டுச் சென்றிருந்தார். கணேஸ் வாத்தியைக் கண்டால் பண்ணையில் உள்ளவர்கள் உசாராகி விடுவார்கள் என்ற எண்ணம் போலும்.

அவர்களை மடக்கி விடயத்தை முடித்துக் கொண்டு உமா மகேஸ்வரனும், செல்லக்கிளியும், மற்றவர்களும் பாதையின் முகப்புக்கு வந்தபோதுதான் சாரதியையும் கணேஸ் வாத்தியையும் அவர்கள் கண்டார்கள். உடனே சாரதியை சுட்டு, கணேஸ் வாத்திக்கும் அதற்காக AK 47யைக் குறி பார்க்க, அவர் உமா மகேஸ்வரனின் பின் இருந்து அவரைக் கட்டிப்பிடித்து அழுதார். சில நிமிடங்களக்கு கணேஸ் வாத்தியை முடிப்பதா, இல்லையா என்ற கணக்கெடுப்பில், தற்சமயம் விடுவோம், பின் யோசிப்போம் என அவரையும் காரில் கூட்டி வந்து மாங்குளத்தில் இறக்கி இனிமேலும் இயக்கத்தில் ஈடுபடக் கூடாது எனக் கலைத்து விட்டார்கள்.

நண்பர்கள் - தோழர்கள் உறவு ஒரு நிமிடத்தில் தலைகீழாகும். வாழ்வே மாறும் போது துரோகிகளாக மாறுகிறார்கள்.

ஆனால், உண்மையில் தகவலைக் கொடுத்தவர் செட்டி. பிரபாகரன் விடுதலைப் புலிகளாக மாறுவதற்கு முன்னரேயிருந்து அவருடன் நம்பிக்கையாகப் பழகியவர் செட்டி. செட்டி, செல்லக்கிளியின் ஒன்றுவிட்ட சகோதரன்.

கொலைகள் நடந்து, எங்களையும் சந்தித்துப் போனபின், செல்லக்கிளி செட்டியைச் சந்தித்தபோது தங்களது வீரதீரங்களை அத்துப்படியாக அவருக்கு விவரித்தார். பொலிஸ் உளவாளியாக மாறியிருந்த செட்டி, இவற்றைக் கடிதமூலம் தனது தொடர்பாளருக்குத் தெரியப்படுத்த, அந்தத் தகவல்களில் விரைவிலேயே மர்மங்கள் முடிச்சவிழ்க்கப்பட்டு, செய்திகள் அதிர்வலைகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

ஒருபுறம் சன்சோனி ஆணைக் குழுவின் முன் பொலிஸாருக்கு எதிராக, பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது அனுப



பிரபா

வங்களைக் கூறினர். அநேகமானவை பொலிஸாருக்கு எதிராகவே இருந்தன. தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங்களில் இனச் சார்பாகவும் தாம் ஆதரவு தந்த கட்சிகளின் போக்கிலும் செய்திகள், தகவல்கள் பிரசுரிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

அடுத்த பக்கத்தில் பாதுகாப்புப் படைகளுக்கு ஒரு தலை மறைவு இயக்கம் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் இயங்கி வருவது தெரிந்து விட்டது.

அல்பிரட் துரையப்பா கொலை சிலரால் அரசியல் நோக்கத்திற்காகச் செய்யப்பட்டாலும், கனகரத்தினம் எம்.பி கொலை முயற்சிக்கும், பஸ்தியாம்பிள்ளை கொலைக்கும் நெருங்கிய தொடர்புகள், தமிழ் அரசி



உமா

யல் மட்டங்களிலும் உண்டு எனப் பாதுகாப்பு அமைச்சும் செய்திகள் வெளியிட்டது.

பாதுகாப்பு அமைச்சின் செய்திகளாலும் அவை ஊடகங்களில் பெற்ற விளம்பரங்களினாலும் வேறு யாராவது அவற்றில் குளிர்காய வெளிக்கிட்டாலும் எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களை உத்தியோக பூர்வமாக வெளிப்படுத்தும் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டனர்.

அதில், 'தமிழ் புதிய புலிகள்' என்ற பெயர் 5 மே 1976 முதல் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்று மாற்றம் பெற்றதாகவும், அல்பிரட் துரையப்பா முதல் நடத்தப்பட்ட பதினொரு கொலைகளுக்கு உரிமைகோரி வேறு எவரும் இதற்கு உரிமை கோரினால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. துண்டுப் பிரசுரம் உமா மகேஸ்வரனால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. காசோலையைப் பாவிக்க விளைந்தவாறு இந்த துண்டுப்பிரசுரத்தில் தன்னை அடையாளப்படுத்துவதில், நிதியத்துடன்தான் துணையாக இயங்குவதையும் அதனால் ஏற்படுத்தப்படும் தொடர்புகளையும் அவர் கணக்கெடுத்ததாகத் தெரியவில்லை.

பின்னாளில் ஆணைக்குழுவின் அனுமதியில் பொலிஸாரின் சில புலன் விசாரணைக் கோப்புக்களைப் பார்க்கும் - பிரதி எடுக்கும் - சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அவை புலன் விசாரணை மேற்கொண்ட சில பொலிஸ் அதிகாரிகளைக் குறுக்கு விசாரணை செய்வதற்காக அனுமதிக்கப்பட்டது.

அவற்றில், அந்தத் துண்டுப் பிரசுரம் (தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிவிப்புப் பிரசுரம்) நிதியத்துடன் தன்னிச்சையாக தொண்டுகள் செய்த ஊர்மிளாவால் (இவர் இளைஞர் பேரவையிலும் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுவிலும் அங்கத்தினர்) நிதியத்தின் அலுவலகத்திலிருந்த தட்டச்சு இயந்திரத்தில் தட்டச்சு செய்யப்பட்டதென்பதையும், மடுப் பண்ணை கொலைகள் பற்றி செட்டி தகவல் கொடுத்த கடிதத்தின் பிரதி புலன் விசாரணைப் பகுதியில் பணியாற்றிய நண்பர் ஒருவர் மூலம் ஊர்மிளாவின் கைக்கு வந்து, அதிலிருந்துதான் பின் செட்டி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது எனப் பொலிஸார் அறிந்திருந்தார்கள் என்ற குறிப்புக்களையும் கவனித்தேன். இந்த சுமைகளுடன்தான் நிதியம் இயங்கி, ஆணைக்குழுவின் விசாரணையையும் முன்னெடுக்கவும் வேண்டி இருந்தது.

### 660.இவை ஆணைக்குழுவின் விசாரணையில் தாக்கங்கள் தந்தனவா?

தாக்கங்கள் புலனாய்வினால் தெரியப் படுத்தப்படுத்தப்பட்ட செய்திகளுக்கு ஊடகங்கள் - முக்கியமாக சிங்கள, ஆங்கில தரப்புக்களை - அவற்றிற்கு பூசிய முலாம்களால் எழுந்தன. செய்திகள் மாத்திரமல்ல கருத்தாக்கங்களும் இருந்தன.

ஆணைக்குழு தலைவரானாலும் அவரும் மனிதர். நீதிபதி.ஒரு பழமைவாதி (Conservative). சட்டம், ஒழுங்கு என்பவை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற கொள்கைவாதி. தமிழீழ விடுதலைப் புலிகளின் துண்டுப் பிரசுரத்தில் 11 கொலைகளுக்கு அவர்கள் உரிமை கோரியதால், ஆணையத்தின் முன் சாட்சியமளித்த குருசாமி போன்றோரைக் கொன்றது யார்? ஏன்? - என்ற கேள்விகள் ஆணையாளருக்குத் தொந்தரவு கொடுத்தன.

யாழ்ப்பாணத்திலும், அனுராதபுரத்தி



துரையப்பா


லும், திருகோணமலையிலும் நாம் கண்டவராக அவர் இருக்கவில்லை. இடைக் கால நிகழ்ச்சிகள் அவரைப் பாதித்திருந்தன.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட முடியாத விதத்தில் எதிர் சவால் விடுக்கும் கட்டமைப்புக்கள், அரசியல் நோக்கில் இயங்குவது பற்றிப் பண்டிசொய்சா தொடக்கிய கருத்துத் திரும்பவும் மேடையேறியது. அதற்குச் சாட்சியாக திருகோணமலையின் கடைசி நாள் சம்பவங்களும் கண்டியில் தொடங்கிய அமர்வும் வெளிப்பட்டுத் தெளிவாகின.

(வளரும்)

VIRAKESARI 'THE PREMIER THAMIL DAILY IN SRI LANKA' PUBLISHED
THE FOLLOWING LETTER ON THE 28th APRIL 1978

10 கொலைகளையும் நடத்தியது நாமே



தமிழீழ விடுதலைப் புலிகள் அனுப்பிய கடிதம்

தமிழீழ விடுதலைப் புலிகள்
LIBERATION TIGERS OF THAMIL EALAM

வேறுயாரும் உரிமை கொண்டாடினால்
கடும் நடவடிக்கையெடுக்கப்படும்
தமிழீழ விடுதலைப் புலிகள் கடிதம்

TYPED REPRODUCTION FOR CLARITY

25th April 1978

TO WHOM IT MAY CONCERN

The founder name of the organization Tamil NEW TIGERS (T.N.T.) was changed on 5.5.76 and the new name is LIBERATION TIGERS OF TAMIL EALAM. We claim responsibility for the following deaths.

1. Mr. Alfred Duraiappah (Mayor for Jaffna, S.L.F.P Organiser Northern region. Shot Dead.
2. Mr. N.Nadarajah (Proparitar Petrol Garage, Urumpirai, and S.L.F.P Organiser, Kopay (Bombed)
3. Mr. A. Karunanithi (C.I.D Police K.K.S.) Shot dead.
4. Mr. Shanmuganathan (C.I.D Police. K.K.S) Same day shot dead.
5. Mr. Shanmuganathan (C.I.D Police V.V.T)
6. Mr. Thangarajah (Sec. of the former S.L.F.P. M.P Nallur Mr. Arulampalam)
7. Mr. C. Kanagaratnam (MPfor Pottuvil former T.U.L.F and present U.N.P)
8. Mr. Bastiampillai (C.I.D Inspector of Police)
9. Mr. Perampalam (C.I.D Sub-Inspector of Police)
10. Mr. Balasingam (C.I.D Sergent of Police)
11. Mr. Siriwardene (C.I.D Police Driver).

The Bastiampillai Party came in search of LIBERATION TIGERS of TAMIL EALAM about 6 a.m on 7th April 1978 with S.M.G., shot gun, Revolvers and Pistol, and attacked Tigers but the Tigers destroyed them without any death or body injury to Tigers and the car was also destroyed.

No other groups, Organisation or Individuals can claim this death. Serious action will be taken against those who claim the above other than Tigers in Ceylon or Abroad.

We are not responsible for Past robberies of any kind.

Secretary
CENTRAL COMMITTEE

T.U.L.F - Tamil United Liberation Front.
U.N.P - United National Party.
S.L.F.P - Sri Lanka Freedom Party.
K.K.S - Kankesanturai.
V.V.T - Valvettiturai.
C.I.D - Criminal Investigation Department.
M.P - Member of Parliament.

புலிகள் உரிமை கோரிய கடிதம்

# வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையின்படி சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வே எமது பற்றுறுதி!

## இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் வலியுறுத்து



வடக்கு கிழக்கில் எப்போதும் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்களிடம் மீண்டும் மீண்டும் நாம் பெற்றுள்ள ஆணையின்படி, எமது வரலாற்று ரீதியான பாரம்பரிய வாழ்விடத்தில் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை எட்டுவதற்கு நாம் தொடர்ந்தும் பற்றுறுதி கொண்டுள்ளோம். அரசமைப்பு மறுசீரமைப்புக்கான எங்கள் முன்மொழிவாக இதை நாம் தொடர்ச்சியாக முன்வைத்துள்ளோம்.

– இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ் மக்கள் சார்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவராலயத்தில் வைத்து வழங்கிய தமிழ் மக்களின் அபிலாஷைகள் அடங்கிய ஏழு பக்க ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்திய இலங்கை உடன்படிக்கையும் தமிழ் பேசும் மக்களின் ஆட்சி அதிகாரப் பகிர்வுக்கான அரசியல் அபிலாஷைகளும்." என்று தலைப்பிட்டு வழங்கப்பட்ட ஆவணத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

இலங்கை 1948 இல் பிரித்தானியர்களிடமிருந்து சுதந்திரமடைந்த காலம் முதல் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களிடம் தமிழ்பேசும் மக்கள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைக் கோரி வந்துள்ளனர். தமிழ் மக்களின் அரசியல் தலைமைகள் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சட்டபூர்வமான தமது அபிலாசைகளின் அடிப்படையில் ஒரு தீர்வை வேண்டி நின்றனர். உள்நாட்டிலும், சர்வதேச சமூகத்தின் உதவியுடனும் தீர்வு ஒன்றைக் காணுவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், தமிழ் பேசும் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு இன்றுவரை தீர்வு காணப்படாமலே இருந்து வருகிறது.

தமிழ் பேசும் மக்கள் கண்ணியத்துடனும், சுயமரியாதையுடனும், அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கான தமது சட்டபூர்வமான அபிலாசைகளைத் திருப்திப்படுத்தும் விதமாக, நீதியான, நிரந்தரமான ஒரு தீர்வைக் காணுவதற்குத் தனது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி கடந்த 40 ஆண்டுகளாக இந்த முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டு வந்திருப்பதற்கு நாம் இந்திய அரசாங்கத்துக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

வடக்கு கிழக்கில் எப்போதும் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்களிடம் மீண்டும் மீண்டும் நாம் பெற்றுள்ள ஆணையின்படி, எமது வரலாற்று ரீதியான பாரம்பரிய வாழ்விடத்தில் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை எட்டுவதற்கு நாம் தொடர்ந்தும் பற்றுறுதி கொண்டுள்ளோம். அரசமைப்பு மறுசீரமைப்புக்கான எங்கள் முன்மொழிவாக இதை நாம் தொடர்ச்சியாக முன்வைத்துள்ளோம்.

1983 இல் இந்திய அரசாங்கம் தனது நல்ல அலுவலகங்களை வழங்கியது. அதனை இலங்கை அரசும் ஏற்றுக்கொண்டதன் விளைவாக 29, ஜூலை, 1987 இல் இந்திய – இலங்கை உடன்படிக்கை கைச்சாத்தானது. அதன் பின்னர் இலங்கையில் அரசமைப்பில் 13 ஆவது சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, மாகாணங்களுக்கு அதிகாரப்பகிர்வை வழங்குமென்று எதிர்பார்ப்புடன் மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது. ஆனால் 13 ஆவது சட்டத்திருத்தம் ஓர் ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் ஏற்படுத்தப்பட்டது. அதனால் அதிகாரப் பகிர்வுக்குப் பதில் அதிகாரப் பரவலாக்கலே ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பின்னணியில்தான், அதன் பின்னர் எடுக்கப்பட்ட ஒவ்வொரு முயற்சியும் 13 ஆம் சட்டத் திருத்தத்தைத் தாண்டி ஓர் கூட்டாட்சி (சமஷ்டி) அமைப்பை நோக்கியதாக நகர்ந்தது. மேற்கொள்ளப்பட்ட பல முன்மொழிவுகளும், திடசங்கற்பங்களும் இங்கு சொல்லப்படவேண்டிய விடயங்களாகும்.

முதலில் 1993 இல், அப்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் மங்கள முனசிங்க தெரிவுக் குழு இந்திய அரசமைப்பு முறையில் அதிகாரப் பகிர்வை ஏற்படுத்தலாம் என்று பரிந்துரைத்தது. அத் தெரிவுக்குழு பொதுப்பட்டியலை இல்லாதொழிக்கலாம் என்றோ அல்லது, அதில் உள்ள பல விடயங்கள் மாகாண அதிகாரப்பட்டியலுக்கு மாற்றப்படலாம் என்று பிரஸ்தாபித்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் ஓர் அதி உயர ;சபையை அமைக்கலாம் என்றும் அந்தக் குழு மேலும் முன் மொழிந்தது.

இரண்டாவதாக, 1995 இலும், 1977 இலும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சியின் கீழ் அரசாங்கத்தின் அரசமைப்பு மறுசீரமைப்புக்கான முன்மொழிவும், 2000 ஆம் ஆண்டின் அரசமைப்பு மசோதா – அனைத்தும் விரிவான அதிகாரப் பகிர்வுடன், ஒற்றையாட்சி அமைப்பை ஒழித்துவிடலாம் என்றும் முன்மொழிந்தன.

மூன்றாவதாக டிசெம்பர் 2002 இல் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்குமிடையில் ஒஸ்லோ நகரில் நடந்த பேச்சு. அந்தப் பேச்சின் போது, ஒன்றுபட்ட இலங்கைக்குள், தமிழ்பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடங்களில் அக – சுயநிர்ணய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட கூட்டாட்சி (சமஷ்டி) அரசமைப்புத் தொடர்பில் அமையும் தீர்வொன்றைப் பற்றி ஆராயலாம் என்று இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டனர். இலங்கை அரசின் தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், உடன்பாடு எட்டப்பட்டதன் பின்னர் நடைபெற்றதொரு செய்தியாளர் மாநாட்டில் பின்வருமாறு கூறினார்.

"தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமையின் முன்மொழிவுக்குப் பதில் தரும் விதமாக, தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடப் பிரதேசங்களில் அக – சுயநிர்ணய தத்துவத்தின் அடிப்படையில் கூட்டாட்சி (சமஷ்டி) அடிப்படையிலான தீர்வைக் காண்பது பற்றி ஆராய்வது என்று இருதரப்பும் ஏற்றுக்கொண்டுள்ளன. சகல சமூகங்களுக்கும் ஏற்புடையதாக அமையவேண்டும் என்பதை இருதரப்பும் அங்கீகரித்தன. அந்த அடிப்படையில், மேலும் விடயங்களைக் கலந்துரையாடலாம் என்று இரு தரப்பும் ஏற்றுக்கொண்டன."

நான்காவதாக, 2006 ஆம் ஆண்டில், ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ புதியதோர் அரசமைப்பை உருவாக்குவதற்காக அனைத்துக்கட்சிகளின் பிரதிநிதித்துவக் குழுவொன்றையும், முன்மொழிவுகளை வகுப்பதற்கென்று நியமித்தார். அந்தக்கூட்டத்தில் தொடக்க நிகழ்வில் அந்தக் குழுக்களின் பணி பற்றி பின்வரும் வார்த்தைகளில் சுருக்கமாக உரைத்தார்.

"பண்டாரநாயக்கா – செல்வநாயகம் உடன்படிக்கை முதல் எடுக்கப்பட்ட கடந்த கால முயற்கள் பற்றி நாம் ஆராய்தல் வேண்டும். மக்கள் தாம் வாழும் பிரதேசங்களில் தமது அரசியல் பொருளாதார சூழ்நிலையின் தலைவிதியையும், கட்டுப்பாட்டையும் தமது பொறுப்பில் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். கணிசமான காலமாக, மத்தியில் தீர்மானம் எடுக்கப்படும் போது வளங்கள் விகிதாசாரத்துக்கு முரணான வகையில் ஒதுக்கப்படுகின்றன. என்பது ஒரு பிரச்சினையாக இருந்துவருகிறது. மேலும், அதிகாரப் பகிர்வு என்பது, தனித்துவ அடையாளம், பாதுகாப்பு என்பவற்றுடன், மத்தியில் அளவுக்கதிகமாகத் தங்கியிராமல் சமூக – பொருளாதார முன்னேற்றம் தொடர்பான பிரச்சினைகள் கையாளப்படவேண்டும் என்பது தெளிவான விடயமாகும். இந்த விடயம் தொடர்பில் பிரதேச சிறுபான்மையினரின் பிரச்சினைகளும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். ஜதார்த்தமான, இலங்கை அரசமைப்புக்கான கட்டமைப்பை நாம் உருவாக்கும் போது இது தொடர்பாக, எமது நெருங்கிய அயல்நாடான இந்தியா உட்பட உலகெங்கும் காணப்படும் உதாரணங்களை நாம் ஆராய முடியும். தற்போதுள்ள முரண்பாட்டின் (போர்) பின்னணியில், எந்தவொரு தீர்வானாலும், நாட்டின் இறைமையை பலியாக்காமல், அதி சாத்தியமான அதி உச்ச அதிகாரப்பகிர்வுக்கு நீண்டு செல்வதாக அமைய வேண்டும்."

இந்த விவகாரத்தில் ஒன்றிணைந்த தலைமைகளான ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா மற்றும் நோர்வே என்பன பிரிவினையை ஏக்கவில்லை. ஆயினும் தீர்வு எதுவாக வேண்டும் என்று தமது கருத்தைத் தெரிவித்தன என்று ஜனாதிபதி ராஜபக்ஷ சரியாகவே சுட்டிக்காட்டியிருந்தார்.

"முஸ்லீம்கள் உட்பட அனைத்து இலங்கையரினதும் உரிமைகளையும் மேம்படுத்தக்கூடியதான ஒரு புதிய ஆட்சி முறைமையைக் கொண்டுவருவதற்கான அரசியல் மாற்றத்தை மேற்கொள்வதற்கு (இலங்கை) தயாராக உள்ளதைக் காட்டுவதாக தீர்வு அமைய வேண்டுமென்றனர். அவ்வாறான நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் ஆதரிக்கும், அவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால் சர்வதேச ஆதரவு குறையும், இன்னும் போதிய அளவில் கவனிக்கப்படாத நியாயப்படுத்தக் கூடிய கணிசமான மனக்குறைகள் இலங்கைத் தமிழ் மக்களுக்கும், முஸ்லீம் மக்களுக்கும் உள்ளன."

அதேவேளை, ஒருங்கிணைந்த தலைமையின் உறுப்பினர்களின் ஒன்றான ஐக்கிய அமெரிக்கா இலங்கை தொடர்பில் சில குறிப்பிடத்தகுந்த அறிவிப்பை விடுத்தது. தென் ஆசிய மற்றும் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்கா உதவி இராஜாங்க அமைச்சர் ஏ.பௌஎர் 01 ஜீன் 2006 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்திருந்த போது தெரிவிக்கையில் –

"தமது சட்டபூர்வமான மனக்குறைகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றமையையும் அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக எதிர்கால இலங்கையில் ஒரு சாதகமான நோக்கையும் அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டுமென நாம் எண்ணுகிறோம். ஜனாதிபதி ராஜபக்ஷ உச்ச அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசியிருக்கிறார். முந்திய பேச்சுகளின் போது கூட்டாட்சி அமைப்பிற்குள் அக – சுயநிர்ணயம் தொடர்பில் உடன்பாடு ஏற்பட்டிருந்தது. எவ்விதமாக இந்தக் கருத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும், இலங்கை என்ற ஒரு நாட்டுக்குள் தமது வாழ்வும் விதியும் தமது கட்டுப்பாட்டில் இருக்கும் எனும் இந்தக் கருத்து வடக்கு கிழக்கில் உள்ள பலருக்கு நம்பிக்கையளிப்பதாக அமையலாம்."

அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதித்துவ குழுவின் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள பல் இன நிபுணர் குழாம் தமது பிரதான அறிக்கையில், ஒகஸ்ட் 2000 ஆம் ஆண்டின் அரசமைப்பு வரைவில் உள்ளமை போன்ற விரிவான அதிகாரப் பகிர்வுக்கான ஒழுங்கமைப்பை முன்மொழிந்தனர். அதேவேளையில் அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழு அறிக்கை, பதின்மூன்றாம் அரசமைப்புத் திருத்தத்துக்கான முக்கியமான திருத்தங்களைப் பற்றி பிரஸ்தாபித்திருந்தது. (பொதுப்பட்டியலை நீக்கிவிடுவது உட்பட்ட) இறுதியில் ஆயுதப் போராட்டம் 2009 இல் முடிவடைந்ததைத் தொடர்ந்து 13 ஆம் சட்டத்திருத்தத்தை அமுல்படுத்தி அதனை வலுப்படுத்துவது என்றவாறு சில வாக்குறுதிகளை வழங்கியது.

2009, மே 26 இல் இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா. சபைப் பொதுச்செயலாளர் பான் – கி – மூனுடன் இணைந்து ஒரு கூட்டறிக்கையை ஜனாதிபதி ராஜபக்ஷ விடுத்தார்.

"13 ஆம் சட்டத்திருத்தத்தை அமுல்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கான தனது வலுவான உறுதிப்பாட்டை ஜனாதிபதி ராஜபக்ஷ வெளிப்படுத்தினார். அத்துடன் தமிழ்க்கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளுடனும் ஒரு விரிவான பேச்சை, தோன்றியுள்ள புதிய சூழ்நிலையில் நடத்தி தனது செயற்பாட்டை மேலும் மேம்படுத்தி இலங்கையில் நீடித்து நிலைக்கக்கூடிய அமைதியையும் நல்லினக்கத்தையும் ஏற்படுத்தப்போவதாகத் தன் எண்ணத்தை வெளிப்படுத்தினார்."

27 மே 2009, அடுத்த நாளே ஐ.நா. மனித உரிமைகள் சபை தீர்மானம் ஒன்றை மேற்கொண்டபோது அதில் ஜனாதிபதி ராஜபக்ஷவின் மேற்படி பற்றுறுதி பின்வரும் வார்த்தைகளில் ஒன்றிணைக்கப்பட்டது.

"இராணுவத் தீர்வொன்றுதான் இறுதித் தீர்வு என்றுதான் கருதவில்லை என்று இலங்கை ஜனாதிபதி அண்மையில் அறிவித்துள்ள வாக்குறுதியையும், பதின்மூன்றாம் சட்டத்திருத்தத்தை அமுல்படுத்துவதன்மூலம் இலங்கையில் ஓர் நிலையான அமைதியையும் நல்லிணக்கத்தையும் கொண்டுவருவதற்கான ஓர் அரசியல் தீர்வுக்கான தன் பற்றுறுதியை நாமும் வரவேற்கிறோம்."

(08ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையின்படி ..............

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

2010 ஜீன் மாதத்தில் முன்னாள் இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங், இலங்கை தொடர்பில் அறிக்கையொன்றை விடுத்தார் என்பது குறிப்பிடத்தகுந்ததாகும். அவர் தன் அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு –

“பதின்மூன்றாவது சட்டத்திருத்தத்தை மேம்படுத்தி அதனடிப்படையில் ஓர் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுள்ள பொதியை வழங்கினால் நீடித்த ஓர் அரசியல் தீர்வுக்கு அவசியமான நிலையை உருவாக்கமுடியும். ஜனநாயகம் பன்முகத்தன்மை, சமவாய்பு, மனிதவுரிமைக்கான மதிப்பு என்பவற்றுக்கு ஏற்புடையதான சமாதானம் நீதி மற்றும் கௌரவம் என்பன பொருந்திய ஒரு சூழலில் இலங்கையின் அனைத்து சமுதாய மக்களும் வாழக்கூடியதான ஒரு சூழலை ஏற்படுத்துவதை நோக்கியதான ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்கு இலங்கை ஜனாதிபதி, தான் கொண்டுள்ள துணிச்சலை மீண்டும் வலியுறுத்தியுள்ளார். தீர்வை நோக்கியதாக அதிகாரம் வழங்குவதன் மூலமாகத் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லினக்கம் என்பவற்றைப் பலப்படுத்தக்கூடியதாக அரசமைப்பில் அமைக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட குறிப்பிடக்கூடிய ஏற்பாடுகளைத் தொடர்ச்சியாக அமுல்படுத்துவதற்குத் தான் எடுத்துள்ள தீர்க்கமான முடிவை ஜனாதிபதி வெளியிட்டார். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்சிகளுடனும் விரிவானதோர் பேச்சை நடத்தும்தன் என்னத்தை என்னுடன் பகிர்ந்து கொண்டார். இலங்கையின் அனைத்து மக்கள் மத்தியிலும் அமைதியையும், நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பும் முயற்சிக்கு இந்தியாவின் ஆக்க பூர்வமான ஆதரவை இந்தியப் பிரதமர் வெளியிட்டார்.”

மே 2011 இல் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் புதுடெல்லி சென்றபோது மேற்கூறிய பற்றுறுதி மீண்டும் தெரிவிக்கப்பட்டது. இந்திய வெளியுறவு அமைச்சருடனான செய்தியாளருக்கான கூட்டறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது.

“இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் பேச்சுகளில் விரைவான, உருப்படியான முன்னேற்றத்தை உறுதிசெய்வதற்கு அவரது அரசாங்கம் கொண்டுள்ள பற்றுறுதியை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் உறுதிப்படுத்தினார். 13 ஆம் சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் ஓர் அதிகாரப் பகிர்வு பொதி நல்லிணக்கத்துக்கு அவசியமான சூழ்நிலையை உருவாக்குவதற்குத் தன் பங்கை வழங்கும்.”

இதே பற்றுறுதி, ஜனவரி 2012 இல் மீண்டும் கொழும்பில் மீள வலியுறுத்தப்பட்டது. இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, ஜனாதிபதி ராஜபக்ஷவைச் சந்தித்த பின்னர் அமைச்சர் ஜீ.எல் பிரிஷூடன் கலந்துகொண்ட செய்தியாளர் மாநாட்டில் விடுத்த கூட்டறிக்கையில் பின்வருமாறு கூறினார்.

“அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு ஒன்றை எட்டுவதற்கு இலங்கை அரசமைப்பின் 13 ஆவது சட்டத்திருத்தத்தையும் அதற்கு மேலும் சென்று அதன் அடிப்படையில் ஓர் அரசியல் தீர்வை நோக்கிய தம் நகர்வுக்கான உறுதிப்பாடு தொடர்பில் இலங்கை அரசாங்கம் பல சந்தர்ப்பங்களில் எமக்குக் கூறியள்ளது. பேச்சு நடைமுறைகளில் விரைவான, ஆக்கபூர்வமான அனுகுமுறையை நாம் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றோம்.”

பின்னர், 2015 – மார்ச் 13 ஆம் திகதியன்று பிரதமராகிய தாங்கள் இலங்கைப் நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரை பெரிதும் குறிப்பிடத்தகுந்ததாகும். அதில் –

”இந்தியாவில் உள்ள மாநிலங்களைப் பலப்படுத்துவதே என் முன்னுரிமைக்கான விடயமாக உள்ளது. ஓத்திசைவான கூட்டாட்சியில் (சமஷ்டியில்) நான் அசையாத நம்பிக்கை உள்ளவன். எனவே, நாம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களையும், அதிகார வார்த்தையும் பகிர்ந்தளிக்கிறோம். ஆத்துடன் அவர்களைத் தேசிய மட்டத்தில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் நடைமுறைகளில் முறையான பங்காளனாக்கிக் கொள்கிறோம்.”

29 நவம்பர் 2019 இல் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அரசமுறைப் பயனமாக இந்தியா சென்ற வேளையில், பிரதமர் நரேந்திரமோடி பின்வருமாறு கூறினார்.

“இலங்கையில் நல்லிணக்கம் பற்றி நாம் எமது கருத்துக்களைத் திறந்த மனத்துடன் பரிமாரிக்கொண்டோம். இன ஒற்றுமை தொடர்பில் அனைவரையும் உள்ளடக்கியதான அரசியல் பார்வை பற்றி என்னிடம் ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்தார். சுமத்துவம், நீதி, சமாதானம், கௌரவம் என்பவை தொடர்பில் தமிழர்களில் அபிலாகைகளை நிறைவேற்றும் விதமாக, இலங்கை அரசாங்கம் தனது நல்லிணக்கச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லுமென்று நான் உறுதியாக நம்புகிறேன். இதில் 13 ஆவது சட்டத்திருத்தத்தை அமுல்படுத்துவதும் உள்ளடங்கும் வடக்கு, கிழக்கு உட்பட்ட, இலங்கை முழுவதுமான அபிவிருத்தியில் இந்தியா ஒரு நம்பகமான பங்காளியாக எதிர்காலத்தில் விளங்கும்.”

மேற்கூறிய அனைத்து விடயங்களிலும் இருந்து, இலங்கை அரசாங்கம் பற்பல சந்தர்ப்பங்களில் அரசமைப்பின் 13 ஆவது சட்டத்திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமென்று வாக்குறுதியளித்துள்ளது என்பது தெளிவாகிறது. அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை எட்டுவதற்கு 13 ஆவது சட்டத்திருத்தத்துக்கும் அப்பால் அதன் மீது கட்டியெழுப்பப்படும் என்ற குறிப்பிடத் தகுந்த பொறுப்பை மேற்கொள்வது என்ற விடயமும் இந்த வாக்குறுதியில் அடங்குகிறது.

ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் ஒரு முறையான, முழுமைபெற்ற அதிகாரப்பகிர்வு கிடைக்கும் என்று தமிழ்பேசும் மக்கள் எதிர்பார்க்கவில்லை என்றாலும் கூட, அவ்வாறான வாக்குறுதிகள்; பெரும்பாலும் இந்தியாவுக்கே வழங்கப்பட்டிருக்கின்றன. (மிகவும் பொருத்தமான முறையில்), ஏனெனில், ‘இந்தியா – இலங்கை உடன்படிக்கை’ என்ற இங்கையும் – இந்தியாவும் கைச்சாத்திட்ட அந்த சர்வதேச இருதரப்பு உடன்படிக்கையில் தான் மேற்கூறிய கொள்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆயினும், அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் அதிகாரப்பகிர்வு, தமிழ்மொழிக்கான சமவுரிமை போன்ற விடயங்கள் தொடர்பில் அரசமைப்பில் உள்ள ஏற்பாடுகளை அமுல்படுத்தத் தவறியதோடு மட்டுமல்லாமல், தொடர்ந்தும் மாகாணசபைகளுக்கான அதிகாரங்களையும், அதன் கீழ் வரும் நிறுவனங்களையும் ஒரு தலைப்பட்சமாக மீளப்பெற்றுக்கொண்டுள்ளன. மேலும், தமிழ்பேசும் மக்களுக்குச் சொந்தமான காணிகளை, வடக்கு, கிழக்கின் மக்கள் குடிப்பரம்பலைத் தீவிரமான முறையில் மாற்றியமைக்கும் எண்ணத்துடன் பல்வேறு மறைமுக காரணங்களைக் காட்டி அரசாங்கத்தால் தொடர்ச்சியாகப் பறிக்கப்பட்டுவருகின்றன. இதை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும், இல்லையெனில் இந்திய – இலங்கை உடன்படிக்கையில் உள்ள ஏற்பாடுகள் பூச்சியமாக்கப்பட்டுவிடும். இவை தொடர்பில் பிரதமராகிய தங்களுடைய கவனத்துக்கு வடக்கு கிழக்குத் தமிழ் மக்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் தீவிர கவலைக்குரிய விடயங்களடக்கிய பட்டியலொன்றை நாம் இங்கு இணைத்துள்ளோம்.

இந்த நிலைமையில், இலங்கை அரசாங்கத்தைத் தனது பின்வரும் வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி வலியுறுத்த வேண்டும் என மாண்பு மிகு தங்களிடம் கோருகிறோம்.

1. பதின்மூன்றாம் சட்டத்திருத்தத்தில் உள்ள ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துதல்.

2. 1987 முதல் அரசாங்கத்தின் சகல தரப்புகளாலும் தெளிவாக மேற்கொள்ளப்பட்ட வாக்குறுதிகளை அமுல்படுத்துதல்.

அத்துடன் தமிழ் பேசும் மக்கள் தமது சுய நிர்ணய உரிமையைப் பயன்படுத்தும் வகையில் தம் வரலாற்று ரீதியான வாழ்விடங்களில் கண்ணியத்துடனும், சுய கௌரவத்துடனும், அமைதியாகவும் பாதுகாப்பாகவும், ஒன்றிணைந்த, பிரிக்கப்படாத நாட்டுக்குள் ஏற்படுத்தப்படும் அமைப்பில் வாழ்வதற்கு வழி செய்யவேண்டும்.

இந்த அறிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, தமிழ் மக்கள் கூட்டணி தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஜனநாய மக்கள் விடுதலை முன்னணி தலைவர் த.சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தலைவர் க.பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் ந.சிறிகாந்தா ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர். அத்துடன் –

இலங்கை தமிழ்பேசும் மக்களின் அவசர தீவிர கரிசனைக்குரிய விடயங்கள்

1. 13 ஆவது சட்டத்திருத்தமும் மாகாண சபைகளும்

a. இந்திய – இலங்கை உடன்பாட்டின் விளைவாக 13 ஆம் சட்டத்திருத்தத்தின் கீழ் உடன்பாடு காணப்பட்ட சட்டம் ஒழுங்கு, நிதி, காணி, கல்வி, விவசாயம்சார் சேவைகள் என்பவற்றுடன் தொடர்புடையதான, இது வரை அசல் மூல ஏற்பாடுகளில் இருந்து பலவீனப்படுத்தப்பட்ட சகல ஏற்பாடுகளையும் மீண்டும் கொண்டு வருதல் வேண்டும். ஜனாதிபதி மட்டத்தில் இலங்கையால் பொறுப்பேற்கப்பட்ட விடயங்களும் இதில் அடங்கும்.

b. தேர்தல் மறுசீரமைப்புக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு இலங்கை அரசாங்கம் கொடுத்த உறுதிமொழிக்கு இணங்க, மாகாண சபைத் தேர்தலை நடத்த ஏதுவாக தேர்தல் ஆணையகத்துக்கு வழிவகுத்தல் வேண்டும்.

2. மொழி உரிமை – 16 ஆவது சட்டத்திருத்தம்

a. அரசமைப்பில் 16 ஆவது சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்ட உடன் 17 டிசெம்பர் 1988 இல் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட போது இருந்த ஏற்பாடுகள் அனைத்தும் சொல்லிலும் செயலிலும் அமுல்படுத்தப்பட வேண்டும்.

b. தேசிய மொழிகள் தொடர்பிலும் நிர்வாகத்தில், சட்டவாக்கத்தில், நீதித்துறையில், பாடசாலைகளில் பயிற்சி மொழியாகவும் அரசமைப்பின் அத்தியாயம் iv உள்ள 18 முதல் 25A வரையான பிரிவுகளில் குறிப்பிடப்பட்டிருப்பதன் பிரகாரம் அவை சொல்லிலும், வடிவிலும், அதன் அர்த்தப்படியும் முழுமையாக அமுல்படுத்தப்பட்ட வேண்டும்.

3. மக்கள் தொகைப் பரம்பல், நிலப்பறிப்பு மற்றும் தேர்தல் தொகுதி எல்லைகள் மாற்றம்

a. 1957 இன் பண்டா – செல்வா உடன்பாடு
1965 இன் டட்லி – செல்வா உடன்பாடு
1987 இன் இந்திய – இலங்கை உடன்படிக்கை
என்பவற்றில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரனாக செயற்பட்டு வடக்கு கிழக்கின் மக்கள் தொகைப் பரம்பல் வடிவத்தை எடுக்கப்படும் சகல முயற்சிகளும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

b. வரலாற்று ரீதியான வாழ்விடங்களான வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்பதை உறுதிப்படுத்துகின்ற ஆதாரங்களைத் திரிவுபடுத்துவது மற்றும் அழித்தொழிப்பது போன்று அகழ்வாராய்ச்சித் திணைக்களத்தாலும், மகாவலி அதிகாரசபையாலும், வனத்திணைக்களத்தாலும், வனவிலங்கு திணைக்களத்தாலும், சுற்றுலாத்துறைச் சபையாலும் மற்றும் பாதுகாப்பு, உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சாலும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், முயற்சிகள் என்பவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

உ. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடைப்பட்ட எல்லைப் பிரதேச கிராமங்கள் சிங்களப் பிரதேசங்களுடன் இணைக்கப்படுவதன் மூலம் அல்லது சிங்களப் பிரதேசங்களின் கிராமங்கள் தமிழ் பிரதேசங்களுடன் இணைக்கப்படுவதன் வாயிலாக வடக்கும் கிழக்கும் மாற்றியமைக்கப்படுதல் மூலம் தமிழர்களைத் தமது பகுதிகளிலேயே சிறுபான்மையினதாக மாற்றி இன விகிதாசாரம் மாற்றப்படுகிறது. இதனால் உள்ளூராட்சி மாற்றங்களில் மாகாண சபைகளில், நாடாளுமன்றத்தில் தமது அரசியல் பிரதிநிதித்துவத்தைத் தமிழ் மக்கள் பெற்றுக்கொள்வது தடுக்கப்படுகின்றது. இவ்வாறான நடைமுறைகள் தொடராமல் நிறுத்தப்படவேண்டும்.

ன. பௌத்தமத காலத்துக்கு முன்பிருந்தே தமிழ் மக்களின் தொன்மை விளங்குகிறது என்பதை அகழ்வாராய்ச்சித் திணைக்களம் அங்கீகரிக்க வேண்டும். தமிழர்களே (பௌத்த மத தமிழர்களே) பௌத்தத்தை இலங்கைக்குள் அனுமதித்து வறவேற்றனர் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் வரலாற்றைக் கொச்சைப்படுத்துவதையும் கைவிட்டு, அந்த உண்மைகளுக்கு இணங்கி செயற்பட வேண்டும்.

4. பிரசாவுரிமையும் சமத்துவமும் (நாட்டின் குடியுரிமையும் சமத்துவமும்)

முழுமையான குடியுரிமை என்ற அர்த்தத்தின் அடிப்படையில் சமவுரிமை, வீட்டுரிமை, வாழ்வாதார உரிமை, கல்வி, சுகாதாரம், அரசியல் பிரதிநிதித்துவம் என்பனவற்றை உறுதிப்படுத்தி வாக்குறுதி அளிக்கும் உடன்பாடுகளான 1954 இன் நேரு – கொத்தலாவல உடன்பாடு, 1964 இன் சிறிமா – சாஸ்திரி உடன்பாடு, 1974 இன் சிறிமா – இந்திரா உடன்பாடு ஆகிய சகல இலங்கை அரசாங்கத்துக்கும், இந்திய அரசாங்கத்துக்கும் இடையிலான உடன்பாடுகளும் பாரபட்சமான முறையில் மீறப்படுவதுடன், உதாசீனம் செய்யப்படுகின்றன. இவ்வாறான சம உரிமை மீறல், பராபட்சம் என்பன உடனடியாக நிறுத்தப்பட்டு முழுமையான குடியுரிமையை நோக்கி நகரவேண்டும்.

5. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் உள்ள சிறைக் கைதிகள்

தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் எதிராகவே பிரதானமாகப் பயன்படுத்தப்படும் பயங்கரவாத தடைச் சட்டம் உடனடியாக மீளப்பெறப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையிலிடப்பட்டிருப்பவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.

6. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் நியாயமாகவும் முழுமையாகவும் கையாளப்பட வேண்டும். காணாமல் போனவர்கள் தொடர்பான அனைத்து வழக்குகளும் சுதந்திரமாக விசாரிக்கப்பட்டு, இந்த கொடூரமான குற்றத்துக்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

7. தேர்தல் மறுசீரமைப்பு

இலங்கைத் தீவில் ஜனநாயக நடைமுறையில் உள்ள பல கட்சி முறைமையின் கீழ் பரந்து வாழுகின்ற சிங்கள, தமிழ், முஸ்லீம் சிறுபான்மையினர் எவராயிருப்பினும் அவர்களுக்கு இன ரீதியான அரசியல் தேசிய இனங்களுக்குரிய போதிய பிரதிநிதித்துவத்தைப் பெறக்கூடியதாக அவர்களுடைய அரசியல் கட்சிகளுக்கும், நலன் நாடும் குழுக்களுக்கும் நாடாளுமன்றைத்திலும், மாகாண சபைகளிலும் கிடைப்பதற்கு வழிசெய்ய வேண்டும்.

8. ஒரே நாடு ஒரே சட்டம்

a. மத்திய அரசாங்கத்தைத் தவிர்ந்த வேறெந்தவொரு சட்டவாக்க அமைப்பும் நாட்டில் இருப்பதைத் தடுப்பது அல்லது ஒழிப்பதன் மூலம் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைத் தடுக்கும் நோக்கில் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற விடயத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

b. தமிழர்களும் முஸ்லீம்களும் தமது பாரம்பரிய சட்டங்களைக் கடைப்பிடிப்பதை இது தடுக்கும். அத்துடன் அவர்களது கலாசாரத்தையும், பரம்பரியத்தையும் பாதுகாப்பதைத் தடுக்கும். இவ்வாறான ஆணைக்குழு இல்லாதொழிக்கப்பட வேண்டும். இலங்கை அரசாங்கத்தால், தேசிய இனங்களின் தனித்துவ அடையாளங்களும், உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டும்.

# ஆழமான கடன்பொறி பற்றி அச்சம் வெளிப்படுத்தும் வாங் இன் விஜயம்!

சீன வெளிவிவகார அமைச்சரின் மாலைதீவு மற்றும் இலங்கைக்கான விஜயங்கள் ஆழமான கடன் பொறி பற்றிய அச்சத்தை உருவாக்குகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் ஒமிக்ரோன் மாறுபாட்டால் இயக்கப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையின் தொடர்ச்சியான அதிகரிப்புக்கு மத்தியில், சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ மாலைத்தீவு மற்றும் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

ஆனால், தேசியவாத இலங்கையர்களும் மாலைத்தீவர்களும் தங்கள் இறையாண்மையின் மீது சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவதாகவும் கடன்பொறி இராஜதந்திரத்தினுள் சிக்கியிருப்பதையும் உணர்ந்துள்ளதாகவும் ஐரோப்பிய அடிப்படையிலான சிந்தனைக் குழு கூறியுள்ளது.

நாட்டின் மோசமான பொருளாதார நிலைமையை அடிப்படையாகக் கொண்டு அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தைப் போன்று சீனா மேலும் முக்கிய பகுதிகளை, வளங்களை சுரண்டுவதற்கான கோரிக்கைகளை முன்வைக்கலாம் என இலங்கையர்கள் அச்சமடைந்துள்ளனர் எனத் தெற்காசிய ஆய்வுகளுக்கான ஐரோப்பிய சிந்தனைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

'இருப்பினும், சீன வெளியுறவு அமைச்சர் மற்றும் அவரது சிறப்புரிமை பெற்ற பரிவாரங்கள் தங்களின் விஜயத்தின்போது இலங்கை மற்றும் மாலைதீவில் காணப்பட்ட பல்வேறு தொற்றுநோய் விதிமுறைகளைக் கண்டு மட்டும் புருவங்களை உயர்த்தவில்லை.

தேசியவாத இலங்கையர்களும் மாலத்தீவர்களும் தங்கள் இறையாண்மையின் மீது கொண்டிருந்த ஆழமான வேரூன்றிய அக்கறையைக் கண்டும் அவர்கள் புருவங்களை உயர்த்தினர்.

அதுமட்டமன்றி சீனாவின் கடன் - பொறி இராஜதந்திரத்தின் வலுக்கட்டாய பயன்பாட்டின் மூலம் பெருகிவரும் ஆபத்து நிலைமைகளையும் அவர்கள் அறிந்துள்ளனர். - என்றும் சிந்தனைக் குழு குறிப்பிட்டுள்ளது.

மாலைத்தீவு ஜனாதிபதி இப்ராஹிம் சோலி, இந்தியா மற்றும் பிற முக்கிய நாடுகளுடன் மிகவும் நெருக்கமாக தொடர்புகொள்வதன் மூலம் சீன செல்வாக்கு மற்றும் கடன் சிக்கலை கட்டுப்படுத்த முயன்றார். மாலைத்தீவில் வாங் யீக்கு ஆதரவான மற்றும் அன்பான வரவேற்பு இருந்த போதும் அங்கு அவர் பல வெற்றிகளைப் பெற்றதாகத் தெரியவில்லை.



மாலைத்தீவில் 2018 இல் சீனா சார்பு தலைவர் அப்துல்லா யாமீன் மாற்றியமைக்கப்பட்டதன் பின்னர் பதவிக்கு வந்த ஜனாதிபதி இப்ராஹிம் சோலிஹ், இந்தியாவுடனான கூட்டுவாழ்வு உறவுகளுக்கு துல்லியமாகத் திரும்பினார்.

இந்தியா மற்றும் பிற முக்கிய நாடுகளுடன் மிகவும் நெருக்கமாகத் தொடர்புகொள்வதன் மூலம் சீன செல்வாக்கு மற்றும் கடன் சிக்கலைக் கட்டுப்படுத்த சோலி முயற்சித்தார் என்றும் சிந்தனைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையைப் போலவே மாலத்தீவுகளும் சீனாவின் ஒரே மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சியின் ஒரு பகுதியாகும், இதை அமெரிக்கா சிறிய நாடுகளை சிக்க வைப்பதற்காக சீனாவின் 'கடன் பொறி' இராஜதந்திரத் திட்டம் என்று முத்திரை குத்தியுள்ளது.

எனவே, சோலிஹ் தலைமையிலான ஆட்சி, இந்த ஆண்டு பரந்த இந்தோ - பசுபிக் முன்னேற்றங்களில் அதிக ஆர்வத்தைக் காட்டுவதன் மூலம் சீனாவுடனான உறவுகளைச் சமநிலைப்படுத்த முயன்றது.

மேலும் இதன் ஓர் அங்கமாக அமெரிக்காவுடன் மாலைதீவு முதல் வருடாந்திர பாதுகாப்பு உரையாடலில் ஈடுபட்டுள்ளது, அத்துடன் அமெரிக்காவின் இராஜதந்திரப் பணியை தனது நாட்டுக்கென நடத்துவதற்கு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறிருக்க, மாலைதீவிலிருந்து வாங் யி இலங்கைக்குச் சென்றார். இலங்கை ஆழ்ந்த பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது.

அந்நாட்டில் 2021 நவம்பரில் அந்நிய செலாவணி கையிருப்பு சுமார் 1.6 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்ததுள்ளது.

இதனால் இலங்கையால் ஆகக்கூடியது ஒரு மாதத்துக்கான இறக்குமதியை மட்டுமே தக்கவைக்க இயலுமாக உள்ளது.

அதுமட்டுமன்றி இலங்கையில் பெருகிவரும் கடன் தொகை, நாணய நெருக்கடி மற்றும் உயர் பணவீக்கம் ஆகியவை காரணமாக இறையாண்மை தொடர்பான கரிசனைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

எனவே, சுற்றுலாவை ஊக்குவித்தல், முதலீடுகள் மற்றும் கொரோனா தொற்றுநோய்க்கு எதிரான போராட்டம் உள்ளிட்ட பல விடயங்கள் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யிக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் ஆராயப்பட்டுள்ளன.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸுடன் வாங் யீ நடத்திய பேச்சின் போது, பிராந்தியத்தில் சீனச் செல்வாக்கை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் புதிய பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாக அந்தச் சிந்தனைக் குழு தெரிவித்துள்ளது. வாங், இந்தியப் பெருங்கடல் தீவு நாடுகளின் வளர்ச்சிக்காக புதிதாக மன்றமொன்றை நிறுவுவதற்கு முன்மொழிந்தார்.

உலக அபிவிருத்திக்கான மையத்தின் கூற்றுப்படி, சீனாவின் ஒரே மண்டலம் மற்றும் பாதை முன்முயற்சியின் கீழ் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய இரண்டும் கடன் தொல்லைக்கு ஆளாகின்றன.

மாலைதீவுகள் மிகவும் பாதிக்கப்படக்கூடியவை என்று கருதப்படுகிறது, அதேநேரத்தில் இலங்கை குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்கப்படக்கூடியது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சிந்தனைக் குழுவின் கூற்றுப்படி, சீன உயரதிகாரியும் அவரது தூதுக்குழுவும், இலங்கைக்கான விஜயத்தின் பின்னணி, சீனாவில் ஆபிரிக்கக் காலடியில் முழுமையாக தங்கியிருக்காது தெற்காசியாவுக்கும் தங்கள் திட்டங்களை விரிவுபடுத்தி நகர்த்துவதாகும்.

ஏனென்றால், ஆபிரிக்காவில் ஆயிரக்கணக்கான நகரங்கள் முழுவதுமாக மூடப்பட்டுள்ள நிலையில் அங்கு அவர்களின் இலக்கு தோல்வி கண்டுவிடும் என்ற அச்சம் சீனாவுக்கு உள்ளது. ஆகவே தான் தற்போது தெற்காசியா நோக்கி நகர்ந்திருக்கின்றது.

## சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் முல்லைத்தீவு வீராங்கனைக்கு தங்கம்!

பாகிஸ்தானில் இடம்பெற்ற குத்துச்சண்டை இறுதி போட்டியில் முல்லைத்தீவு வீராங்கனை கணேஷ் இந்துகாதேவி தங்கப்பதக்கம் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வந்து குத்துச்சண்டையில் சாதித்து பாகிஸ்தானில் இடம்பெறும் சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் பங்குகொண்ட முல்லைத்தீவு யுவதியான கணேஷ் இந்துகாதேவி தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களிப்பட்டமுறிப்பு புதியநகர் கிராமத்தில் தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்து குத்துச் சண்டையில் சாதித்து வரும் கணேஷ் இந்து காதேவி பாகிஸ்தானில் இடம்பெற்றும் சர்வதேச போட்டியில் பங்குகொள்ளத் தெரிவாகி பாகிஸ்தான் சென்றிருந்தார்.


இந்நிலையில் கடந்த செவ்வாய்க் கிழமை பாகிஸ்தான் லாகூரில் இடம் பெற்ற 25 வயதுக்குட்பட்ட 50 - 55 கிலோகிராம் எடைப்பிரிவின் இடம் பெற்ற குத்துச்சண்டை போட்டியில் தங்கப் பதக்கம் வென்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் பெருமையைத் தேடித் தந்துள்ளார்.

## மின்சக்தி அமைச்சரின் கோரிக்கையை நிராகரித்துள்ளது லங்கா ஐ.ஓ.சி.

இலங்கை மின்சார சபைக்கு எரிபொருள் வழங்குமாறு மின்சக்தி அமைச்சர் முன்வைத்த கோரிக்கையை லங்கா ஐஓசி நிறுவனம் நிராகரித்துள்ளது. தங்களிடம் போதுமான அளவு எரிபொருள் இல்லாத காரணத்தால் இவ்வாறு குறித்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இலங்கைக்கு எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக இந்தியா புதிதாக மேலும் 50 கோடி அமெரிக்க டொலர்களை கடன் எல்லை சலுகையை வழங்கியுள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் ஊடக அறிக்கை ஒன்றிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதுதொடர்பாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுணதீவு பிரதேச வயல் பகுதியிலிருந்து முதியவர் ஒருவர் சடலமாக கண்டெடுப்பு!

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாங்கேணிச்சேனை பிரதேசத்தில் உள்ள வயல்வெளியில் இருந்து முதியவர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாவற்காடு, மாவடித்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 76 வயதுடைய தம்பியப்பா சுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பொன்னாங்கேணிச்சேனை பிரதேசத்தில் வாழ்வாதாரமாக அங்கிருந்து தனது வயல் மற்றும் மாடுகளை நீண்டகாலமாகப் பராமரித்து வருகிறார் எனவும் இடையிடையே தனது வதிவிடத்துக்குச் சென்று வருபவர் எனவும் சம்பவ தினத்தன்று உறவினர் ஒருவர் குறித்த பிரதேசத்துக்கு சென்றவேளை தனது வாடிக்கு அருகில் உள்ள வயல் பிரதேசத்தில் மரணமடைந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார் எனவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வான் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டுள்ளார். மேலும், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தற்கொலை செய்வதற்கு முயன்றுள்ளார் சாவகச்சேரி பொலிஸ் உத்தியோகத்தர்

*யாழ்ப்பாணம், ஜன. 20*

யாழ்.சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தற்கொலைக்கு முயன்ற நிலையில் காப்பாற்றப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் விடுமுறை வழங்க மறுத்தமையாலேயே தற்கொலைக்கு முயன்ற நிலையில் காப்பாற்றப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அண்மைக் காலமாக நாட்டில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# கட்டுவனில் தமிழ் மக்களின் நிலத்தை அபகரித்து படையினர் வீதி அமைப்பு

## கோட்டாவின் பொய் பித்தலாட்டம் அம்பலம் என்கின்றார் சுமந்திரன்

(ந.லோகதயாளன்)

**வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் வசமுள்ள தமிழ் மக்களின் நிலம் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் உரையாற்றி சில மணி நேரத்தில் கட்டுவனில் தமிழ் மக்களின் நிலத்தை அபகரித்து படையினர் வீதி அமைக்கின்றனர். இந்த நடவடிக்கை ஜனாதிபதியின் பொய் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்துகின்றது.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற சம்பிரதாய உரையில் இந்த நாட்டின் ஜனாதிபதி நான்தான் என்பவர் கூறுகின்றார் மக்களின் நிலங்கள் விடுவிக்கப்படும் என. ஆனால், அன்றைய தினமே கட்டுவன் மயிலிட்டி வீதியில் வெறும் 400 மீற்றர் நீளமும் 26 மீற்றர் அகலமும் கொண்ட நிலத்தைக்கூட விடமாட்டோம் எனப் படையினர் அடாத்தாக வீதி அமைக்கின்றனர்.

அவ்வாறெனில் இந்த நாட்டிலே ஜனாதிபதியின் சொல்லைக்கூட மதிக்காத இராணுத்தினர் இருக்கின்றனர் எனத் தெரிகின்றது. படைத் தரப்பு அவசர அவசரமாக ஆக்கிரமித்து வைத் திருக்கும் பகுதியில் டோசர்கள், டிப்பர் வாகனங்கள் மூலம் வீதி அமைக்கின்றனர்.

அந்த வீதியமைப்பு தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபை வாய் மூடியுள்ளது.

சட்ட விரோதமாக அமைக்கப்படும் வீதி தொடர்பில் இதுவரை எந்த அதிகாரிகளும் வாய் திறக்காதமையால் உரியவர்கள் வழக்குத் தாக்கல் செய்ய என்னை நாடுகின்றனர். இதுதான் இந்த நாட்டின் நிலைமை என்பதனை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

## கைக்குண்டு மீட்பு தொடர்பில் மேலுமொரு சந்தேகநபர் கைது

கொழும்பு, பொரளையிலுள்ள தேவாலயம் ஒன்றில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில், பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த மேலுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

ஓய்வுபெற்ற வைத்தியர் ஒருவரே இவ்வாறு கொழும்பு, தெற்கு பிரிவின் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் சில தினங்களுக்கு முன்னர் எம்பிலிப்பிட்டிய பனாமுர பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட நபர் வழங்கிய தகவலுக்கமைவாகவே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## கிணற்றில் தவறி விழுந்து கரணவாயில் சிறுமி சாவு

சிறுமி ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

யாழ்., வடமராட்சி, கரணவாய், அண்ணாசிலையடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

16 வயதான ஜெகன் கஜனிகா என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி வீட்டில் வளர்க்கப்படும் ஆட்டுக்குக் குழைவெட்டுவதற்காக கிணற்றுக்கட்டில் ஏறி நின்று பூவரசம் குழை வெட்டியபோது அவர் கிணற்றில் தவறி விழுந்துள்ளார்.

இதையடுத்து அவர் மீட்கப்பட்டு பருத் தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## நாடாளுமன்றத்தில் 4 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின்போது நால்வருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற ஊழியர், ஊடகவியலாளர், நடனக் குழுவின் கலைஞர் உள்ளடங்கலாக நால்வருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான நிலையில், நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தவர்கள் அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போதே நால்வருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில், ஜனாதிபதிக்கு விசேட வரவேற்பளிக்கப்பட்டது. இதன்போது வரவேற்பு நடனமும் இடம்பெற்றது.

## உணவுத் தட்டுப்பாடு குறித்து வீண் அச்சம் கொள்ளாதீர்கள்

### அமைச்சர் ரமேஷ் கூறுகின்றார்



இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு தொடர்பில் வீண் அச்சம் கொள்ள வேண்டியதில்லை என்று அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

உரப்பிரச்சினையால் உற்பத்தி ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளது. அது நிவர்த்திசெய்யப்படும். அத்துடன், தட்டுப்பாடு ஏற்படாத வகையில் இறக்குமதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சீனாவிடம் இருந்து நன் கொடையாக அரிசி கிடைக்கவுள்ளது.

மறுபுறத்தில் வீடுகளில் மரக்கறி உள்ளிட்டவற்றை உற்பத்தி செய்யும் நடவடிக்கையும் ஆரம்பமாகியுள்ளது. அரச தரப்பிலும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன. எனவே, உணவு தட்டுப்பாடு தொடர்பில் வீண் அச்சம்கொள்ள வேண் டியதில்லை -என்றார்.

## மஹிந்தானந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்காளிக் கட்சிகளுடனும் ஆலோசனை நடத்தப்பட்டு வருகின்றது எனவும் தெரிய வருகின்றது.

விவசாயத்துறை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை முன்வைப்பது தொடர்பில் இதற்கு முன்னரும் ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்ந்திருந்தாலும், நாடாளுமன்றக் கூட்டத் தொடர் இடைநிறுத்தப்பட்டதால் அது பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்படவில்லை.

முறையற்ற உர முகாமைத்துவத்தால் விவசாயத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு, முறையற்ற கொடுக்கல், வாங்கல்கள் காரணமாக சீனாவுடன் ஏற்பட்டுள்ள இராஜதந்திர நெருக்கடி, திரவ உரம் இறக்குமதியில் இடம்பெற்றுள்ளது எனக் கூறப்படும் மோசடி உட்பட மேலும் பல விடயங்களை மையப்படுத்தியே நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பது குறித்து ஆராயப்படுகின்றது.

எனினும், தற்போதைய சூழ்நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தால் அது அரசுக்கு வாய்ப்பாக அமைந்துவிடும் எனவும், அதன்மூலம் அரசு பலமடையும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால், விவசாயத்துறை அமைச்சரை விமர்சித்து வரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெற முடியும். அவ்வாறு இல்லாவிட்டால், அவர்கள் வாக்கெடுப்பைப் புறக்கணித்தால்கூட அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆட்டம் காணும் எனவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாரத்துக்குள் இறுதி முடிவொன்று எடுக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, பொருள்கள் விலையேற்றம் உட்பட மேலும் பல விடயங்களை மையப்படுத்தி ஒட்டுமொத்த அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தால், அதன்மூலமும் அரசு பலமடையும் என்பதால், விவசாயத்துறை அமைச்சருக்கு எதிராகக் கொண்டுவருவதே சிறப்பு என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# நிதி வழங்கியது இலங்கை மத்திய வங்கி எரிபொருள் நெருக்கடிக்கு தற்காலிக தீர்வு!

## அமைச்சர் உதய கம்மன்பில தகவல்



கொழும்பு துறைமுகத்தில் உள்ள 2 கப்பல்களில் இருந்து எரிபொருளைப் பெறுவதற்கு மத்திய வங்கி நிதி வழங்கியுள்ளதாக அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அதன்படி 37 ஆயிரம் மெட்றிக் தொன் எரிபொருள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

8 நாள்களுக்குப் போதுமான 10 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் மின்சார சபைக்கு வழங்கப்படும் என்றும் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எரிபொருளை விடுவிப்பதன் காரணமாக, நாட்டில் மின் தடை ஏற்படாது என்பதோடு மூடப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களை மீண்டும் திறக்க வாய்ப்புள்ளது.

இதேவேளை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள் விநியோகம் தொடர்பாக ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை காரணமாக நாட்டில் மின்வெட்டு ஏற்படாது என அமைச்சர் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார்.

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கல்முனைக்கு வைத்தியர் றிபாஸ் பதவியேற்றார்!

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ் நேற்று(புதன் கிழமை) தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடமையாற்றிய வைத்தியர் ஜி. சுகுணன் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே வைத்தியர் றிபாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடியைச் சேர்ந்த இவர் பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பதவியேற்பு நிகழ்வில் கல்முனை பிராந்திய முன்னாள் சுகாதார பணிப்பாளர் ஜி.சுகுணன் உட்பட வைத்திய அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## மனித உரிமைகள் கண்காணிப்புகள் குறித்து மட்டக்களப்பில் செயலமர்வு

மனித உரிமைகள் கண்காணிப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றிணைந்த பிரவேசம் என்ற தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான செயலமர்வு நேற்று (புதன்கிழமை) மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ. கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஊடக பயிற்றுவிப்பாளரும் கிரேஸ் ஊடகவியலாளருமான சீ.தொடாவத்த மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இணைப்பாளர் எம்.பிரதீபன் ஆய்வாளர் லஹிறு கித்தரகம உள்ளிட்டோர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையமும் சுதந்திர ஊடக இயக்கமும் இணைந்து மேற்படி செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தது.

மனித உரிமைகள் கண்காணிப்பு மற்றும் முன்னேற்றம் தொடர்பான பிரவேசம் பற்றி மாவட்ட செயற்பாட்டாளர்களைப் பயிற்றுவிக்கும் நோக்குடன் இந்தச் செயலமர்வு இடம்பெற்றிருந்தது.

இதில் மனித உரிமைகள் வளர்ச்சியும் தகவலுக்கான உரிமையும்இ மனித உரிமைகள் பற்றிய அறிக்கையிடலும் எதிர்நோக்கும் சவால்களும், மனித உரிமை மீறல் கண்காணிப்பு நடவடிக்கை போன்ற விடயங்கள் தொடர்பில் கருத்துரைகள் வழங்கப்பட்டது. இதன்போது மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.

## ஓய்வுபெற்ற வைத்தியர் ஒருவரின் வீட்டிலிருந்து துப்பாக்கிகள் மீட்பு!

ஓய்வுபெற்ற வைத்தியர் ஒருவரின் வீட்டில் இருந்து பெருமளவிலான துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பொரளை தேவாலயத்தில் இருந்து கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக குறித்த ஓய்வுபெற்ற வைத்தியர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் அவரிடம் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களுக்கு மேலதிகமாக இரண்டு வாள்கள் மற்றும் கத்தி ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் எம்பிலிப்பிட்டிய - பனாமுர பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.



இந்நிலையில், சந்தேக நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது, குறித்த வைத்தியர் தொடர்பாக தகவல் வழங்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர்.

## மன்னாரில் சூரிய பொங்கல் உழவர் கௌரவிப்பு நிகழ்வு!



மன்னார் மாவட்ட செயலக அலுவலர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் சூரிய பொங்கல் மற்றும் உழவர் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று (புதன்கிழமை) காலை 9 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட செயலகத்தின் அலுவலர் நலன் புரி சங்கத்தின் தலைவரும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளருமான கே. திலீபன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மெல் இ பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மேலும் மாவட்ட செயலகத்தின் உதவி மாவட்ட செயலாளர்களும், முப்படை அதிகாரிகளும், மாவட்ட செயலகத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலக பிரிவுகளிலும் இயற்கை முறையில் விவசாயச் செய்கையை மேற்கொண்டு வரும் 5 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு மதிப்பளிக்கப் பட்டனர்.

மேலும் சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்துக்கான உதவித்தொகையும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரால் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## தாரணி சூப்பர்மார்கெட்டின் பரிசுகளை வென்ற வெற்றியாளர்கள் விவரம்!





தாரணி சூப்பர்மார்க்கெட்டின் முதலாம் வருட நிறைவையொட்டி பரிசுப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்மை அறிந்ததே. அதன் அடிப்படையில் நேற்று மூன்று பரிசுப்பொருள்களுக்குமான வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

அதன்படி முதலாம் பரிசான தங்கக் கட்டியினை அல்லைப்பிட்டியை சேர்ந்த சு.ராஜ பாரதியும், இரண்டாம் பரிசான சாம் சுங் டேப்லட்டை நல்லூரைச் சேர்ந்த ஆ.அருள் நேசனும், மூன்றாம் பரிசான சாம்சுங் கைப்பேசியை திருநெல்வேலியைச் சேர்ந்த சின்னா என்பவரும் பெற்றுள்ளனர்.

குறித்த வெற்றியாளர்களுக்கு அவர்கள் வெற்றிபெற்ற தகவல் தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.01.2022இல் வெளியிடப்பெற்றது.